சரஸ்வதி

ஆசிரியர். வ. விஜயபாஸ்கரன்

இலக்கிய மாத இதழ். 2 அ

சரஸ்வதி

ஆசிரியர்: வ. விஜயபாஸ்கரன்

கைவ ருந்தி உழைப்பவர் தெய்வம்
கவிஞர் தெய்வம், கடவுளர் தெய்வம் —பாரதி.

மலர் 1 இதழ் 7 | நவம்பர் 1955 | மன்மத ஐப்பசி

அரையாண்டுக்குப் பின்!

'சரஸ்வதி' தோன்றி அரையாண்டு முடிந்துவிட்டது. நீங்கள் இன்று வாசிப்பது ஏழாவது இதழ்.

பிள்ளைப் பருவத்துக் கோளாறுகள் ஏதாவது இருந்தால் அவற்றை வென்று, வளர்ந்து, இன்று பொலிவுடன் விளங்கி வருகின்றாள்.

அவளது வளர்ச்சியில் ஆழ்ந்த அக்கரை செலுத்தி, மாதா மாதம் விஷயதானம் அளித்து 'சரஸ்வதி'யைப் போஷித்துத் தமிழகத்துக்கு இலக்கியப் பணி புரிய முன்வந்துள்ள திரு. ஆர். கே. கண்ணன், எஸ். ராமகிருஷ்ணன், முகவை இராஜமாணிக்கம், ஆர். கார்த்திகைவேலு, கே. இராமநாதன், பண்டரிநாதன், பாஸ்கரன் முதலானோருக்கு உங்கள் சார்பில் நன்றி தெரிவிக்கிறேன். அவர்களுடைய அரிய ஆராய்ச்சி விமர்சனக் கட்டுரைகளும், கதைகளும், கலை இலக்கிய விமர்சனங்களும், பிறமொழிக் கதைகளின் மொழி பெயர்ப்புக்களும், பிறநாட்டுக் கலைவேந்தர்கள்பற்றிய சொற் சித்திரங்களும் உங்களுக்கு மாதந்தோறும் கிடைத்துவரும் என்கிற செய்தி எல்லோருக்கும் மகிழ்வூட்டும்.

புதிய ஒளியிலே நமது இலக்கிய - சரித்திரப் பொக்கிஷங்களை அனுபவித்துப் பேணுவதோடு 'சரஸ்வதி' நின்றுவிடவில்லை. நமது இலக்கியப் பரம்பரையுடன் பிரிக்கமுடியாதபடி ஒன்றிவிட்ட அமரர்கள் திரு. வி. க., வ. ரா., வ. வே. சு. ஐயர், இரசிகமணி டி. கே. சி., முதலிய பல அறிஞர்கள் விட்டுச்சென்ற கலைச்செல்வத்தையும் அடிக்கடி சுவைத்து அனுபவிக்க 'சரஸ்வதி' வாய்ப்பளிக்கின்றாள். தமிழ் இலக்கியம் எந்தப் பாதையில் வந்தது, எந்தப் பாதையிலே போய்க்கொண்டிருக்கிறது என்கிற கால-திசை உணர்வு 'சரஸ்வதி' இதழ் ஒன்றை எடுத்துப் பார்ப்போருக்கு உடனே ஏற்படும்.

சுருங்கச் சொன்னால், ஒரு குறிக்கோளுட னும், அதைச் செயல்படுத்தக்கூடிய ஒரு திட்டத்துடனும், 'சரஸ்வதி' இயங்கு கிறாள்.

குறுகிய நோக்கோடு முற்போக்கு, பிற்போக்கு அம்சங் களைக் கணித்து ஒதுங்கிப்போகாமல், மனித வளர்ச்சிக்குப் பாடுபடும் சகல சக்திகளையும் அரவணைத்துப் பேணுவதே 'சரஸ்வதி'யின் இலட்சியம்.

இம்முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் நீங்கள் அளிக்க வேண்டும். தைரியமாக, நிர்தாட்சணியமாக, 'சரஸ்வதி'யை விமர்சனம் செய்யுங்கள். வளரும் பருவத்தில் புகழுரைகளை விட விமர்சனச் சொற்களே பயன்தருவன. புகழ்ச்சியால் தலைக்கனம் என்கிற பீடை வந்து சேரும். ஆக விமர்சனம் செய்க—காய்தல், உவத்தல் இன்றி.

கலை இலக்கியத் துறையில் இன்னும் என்ன அம்சங்களை, என்ன வடிவங்களில் சேர்ப்பது நல்லது என்பதைக் குறித்து உங்களுடைய விருப்பங்களைத் தெரிவியுங்கள்.

அதோடு, கற்பனையழகு மிகுந்த, உண்மையின் உயிர்ப் புடன் கூடிய நல்ல கதைகள், கவிதைகள், ஓரங்க நாடகங்கள் முதலியன அனுப்புங்கள்! எத்தனையோ எழுத்தாளர்கள் இருக் கிறீர்கள், எங்கெங்கேயோ இருக்கிறீர்கள். உங்களுக்கு 'சரஸ் வதி' சந்திக்குமிடமாக இருக்கட்டும்! கூட்டு முயற்சியில் பயன் எவ்வளவோ உண்டு.

கடைசியாக 48 பக்கங்கள் கொண்ட பத்திரிகையை எப்படி 2 அணுவுக்குத் தருகிறீர்கள் என்று அனைவரும் கேட் கிறீர்கள். மாதாமாதம் பணத் தியாகம் செய்துதான்! பத்திரிகையின் விற்பனையை உயர்த்துவதில் ஒருவர் பாக்கியின்றி நீங்கள் அனைவரும் உதவினால், நஷ்டத்தைத் தவிர்த்து, இன்னும் சிறப் பாக முன்னேறமுடியும். ஏஜென்ஸிக்கு ஒவ்வொரு ஊரிலும் ஏற்பாடு செய்யுங்கள் என்று வேண்டுகிறோம்.

பத்திரிகைக்குச் சந்தாதாரர்களாக உடனே சேருங்கள். பிரதிகள் கிடைப்பதில் உத்தரவாதம் தேடிக்கொண்டமாதிரி இருக்கும்; அதோடு இலக்கியப் பணியில் பங்குதாரர்களாகிய மாதிரியும் இருக்கும். சந்தாத் தொகை சரஸ்வதிக்கு மூலதனம் போல.

ஆண்டு நிறைவு நெருங்குமுன்னர் 'சரஸ்வதி' தமிழ் நாட்டில் அசைக்கொணாத ஸ்தானத்தைப் பெற்றுவிடவேண்டும்.

வணக்கம்.

ஆசிரியர்.

நீங்கள் பாரதியை எப்படிப் பார்க்கிறீர்கள்?— என்று கேட்கிருர்கள், ராஜாஜியின் பிரசங்கத்தைக் கேள்வியுற்று! மார்க்ஸிஸப் பார்வையின் துணை கொண்ட ஒரு பதில் இதோ!

பாரதியும், சத்தியமும்

ஆர். கே. கண்ணன்

புலவன், அரசியல் வாதி, வேதாந்தி, சீர்திருத்த வாதி, பத்திரிகையாசிரியன், பக்திமான் — இவையெல்லாம் பாரதியின் மூர்த்தியையும், கீர்த்தியையும் மதிப்பிட்டு அள வெடுத்துக் கூறும் சொற்கள்.

இவையனைத்தும் உண்மையே; ஆனல், முழுவுண்மையாகாது.

பாரதி ஒரு கவிஞன் என்று கொள்வதே சாலச் சிறப்புடையதாகும்.

அவனது வேதாந்தம் ஒரு வெறும் சிப்பி: அதற்குள் ஒளி வீசிக் கிடக்கும் முத்து அவன் கவிதையே.

அவனது அரசியலுக்கு ஒரு எல்லையுண்டு; ஆனல், அவனது கவிதையின் வீச்சுக்கும் வீர்யத்துக்கும் வரம்பே கிடையாது.

அவனது சில கருத்துக்கள் சில சமயம் சிறு குன்றுகளின் முகட்டைத்தான் முட்டுகின்றன. ஆனல், அவன் கவிதையோ எப்பொழுதும் இமயத்தின் முடியைத் தொட்டு அதற்கு மேலும் உள்ள கைலாயத்தையே ஊடுருவிக் கலகம் செய்கிறது, சக்தியும் சிவனும் தேவர்களும் நிம்மதியிழந்து நடுநடுங்குகின்றனர்.

அவனது கருத்துக்களே அவனது கற்பனைக்கு ஆதாரம் - ஒப்புக்கொள்கிறேன். அக்கருத்துக்களில் முக்காலே மும்மாகாணி அவன் காலத்துக்கு முற்போக்கானவை, சில மிகப் புரட்சிகரமானவை - ஒப்புக்கொள்கிறேன்.

'பாரதி நோக்கு' என்ற கட்டுரையில் இதைத்தான் முன்பு விவரித்து விமர்சித்தேன்.

பாரதியின் இறுதிக்காலத்தில் காந்தீயம் அவனை ஆட்கொள்கிறது என்பது சரித்திர உண்மை.

அதனுல் அவனது அரசியலுக்குக் காந்தீயம் வரம்பு கட்டுகிறது; ஆனல் அவனது கவிதைக் கற்பனைக்கு வேலி போட முடியவில்லை.

பொதுவுடமை ஆதர்சத்தைக் கண்டமாத்திரத்தில் நெஞ்சாரத் தழுவி இன்புற்று வாழ்த்திய கவிஞன், அதைச் சாதித்த லெனினுடன் அரசியல்வாதி

போல வாதித்து இலட்சியத் தூய்மை, செயல் தூய்மை என்று வேறுபடுத்திப்பார்த்துக் குழம்பு வதை நாம் பார்க்கிறோம். காந்தீ யத்தின் ஆதார நிலை இன்று வரைக்கும் இதுவேதான். எனவே அரசியல் வாதியாகப் பேசும்பொழுது 'அஹிம்சை, செயல் தூய்மை' என்றெல்லாம் கூறுகிறான். லெனினிடமிருந்து, மிகுந்த அடக்கத்துடன், தன்னை வேறு படுத்திக் காட்டிக்கொள் கிறான்.

ஆனால், எழுத்தாணியை ஏட் டில் பதியவைத்து கற்பனை விசையை முடுக்கியவுடன் தன் னையே மறந்துவிடுகிறான், காந்தீயத் தையே மறந்துவிடுகிறான், உலகையே மறந்துவிடுகிறான். "பாரத சமுதா யம் வாழ்கவே" என்ற வரியைத் தொடர்ந்து 'முப்பது கோடி சங்க முழுமைக்கும் பொது வுடமை' என்று எழுத்தாணி செல்கிறது. அதையும் முந்திக் கொண்டு கற்பனை பறக்கிறது, விசும்பில் ஏறிநின்று சுற்றுமுற் றும் பார்க்கிறது. 'ஒப்பிலாத சமுதாயம் உலகத்துக்கு ஒரு புதுமை' என்று வியந்தோது கிறது. அப்புறம் கவிஞனைப் பார்க்கவேணுமே! சிருஷ்டித் துடிப்பிலே பிறக்கும் சொப்பன வஸ்தையும் மயக்கமும் கவிஞ னைப் பூர்ணமாக அடிமைப் படுத்தி கிறுகிறுப்படையச் செய்கிறது. யதார்த்த உலக உண்மைகளாலும் அனுபவங் களாலும் தூண்டப்பட்டு, மக்கள் மீதுள்ள ஆழ்ந்த பாசத்தால் உந்தப்பட்டு, வானேக்கிப் பாய்ந் தது கவிஞனின் கற்பனை என் கிற மின்னல் கீற்று! உடனே, இடியோசை கேட்கிறது:

"இனியொரு விதி செய்வோம்—அதை
எந்த நாளும் காப்போம்
தனியொருவனுக் குணவில்லையெனில்
ஜகத்தினை யழித்திடுவோம்"

என்ற சூளுரை, எல்லையற்ற காலத்தின் எல்லையைத் தாண்டி ஒலியும் எதிரொலியுமாய் சப் திக்கிறது. கற்பனையின் தூய்மை ஒரு தீர்க்கதரிசனமாகப் பரிண மித்துத் தனது நேர்மையை நிலைநாட்டிவிடுகிறது.

கவிதைக் கற்பனை வெற்றிமுரசு கொட்டுகிறது; காந்தீயம் தோற்று வீழ்கிறது.

யதார்த்த வாழ்க்கையின் இயக்கத்துக்கும், காந்தீயத்துக் கும் உள்ள முரண்பாட்டை— அறிவுக்கும் அனுபவத்துக்கு மிடையேயுள்ள முரண்பாட்டை— உணர்ச்சிக்கும் உணர்வுக்கு மிடையேயுள்ள முரண்பாட் டை—பாரதி கவிதையிலே சுட் டிக்காட்டினல் போதாது. அதோடு நாம் திருப்தியடைந்து விட முடியாது. திருப்தி யடை வோமானல் கவிஞனைச் சரியாக எடை போட்டதாகக் கூறிக் கொள்ளமுடியாது. கவிஞனைவிட அவனது கவிதை உயர்வாக, சிறப்பாக, விசுவரூப மெடுப்பதைக் கண்ணிருந்தும் காணத் தவறியவர்களாவோம்.

முரண்பாடுகளைப் பிரதிபலிக் கிறான் பாரதி என்று பார்த்தால் போதாது. கவிஞனின் உணர் வின் அடியாழத்திலே யிருந்து புரளும், தளும்பும், துடிக்கும் உள்

ஞுணர்வு இருக்கிறதே—அந்த உள்ளுணர்வு கற்பனை என்ற மந்திரக்கோலால் உயிர்பெற்று, அசைவுகொண்டு, அந்த முரண் பாட்டைத் தன்னுள்ளே சிக்கவிழ்த்து வெற்றி கொள்கிறது, உண்மையைத் தேடி யடைகின்றது. இந்த வெற்றி தான் ஒரு கவிஞனுக்குக் கிடைத் தற்கரிய மகோன்னதமான வெற்றியாகும். ஏனென்ருல், அப்பொழுதுதான் கவிஞன் தன்னை வென்று, காலத்தையும் வெல் கிருன்; தீர்க்கதரிசியாகிருன். ஆதர்சக் கவி என்று மக்கள் அவனை ஸ்தோத்தரிக்கின்றனர்.

கலைஞனையும், கவிஞனையும் மதிப்பிடுவதற்கு மார்க்ஸ் அருளிய அளவுகோல் இதுதான்.

ஜெர்மன் நாட்டு கவியரசன் கதேயையும், பிரெஞ்சு நாட்டு இலக்கியமன்னன் பால்ஸாக் என்பவனையும் மார்க்ஸ் மெச்சியது இந்த வெற்றியைக் குறித்துத் தான். முடியாட்சி பற்றியும், சமுதாயத்தைப்பற்றியும் பால்ஸாக் கொண்டிருந்த கருத்துக்கள் பிற்போக்கானவை. ஆனுல், அவனது நாவல்களில் அவன் சித்திரித்த பிரெஞ்சு விவசாயிகள், புரட்சி,கலகம் என்று கிளம்புகின்றனர். கலைஞனின் கருத்துக்களை கலைஞனின் சிருஷ்டியே கலைத்து நிர்மூலமாக்குகின்றது. மிகச் சிறந்த யதார்த்த வாத இலக்கியப் படைப்புக்கு பால்ஸாக் உதாரண புருஷன் என்று மார்க்ஸ் எங்கல்ஸ் மெச்சுகின்றனர். தனது கருத்துக்குகந்தவாறு உயிரற்ற விவசாயிகளை அவனது கற்பனை சிருஷ்டிக்க மறுத்துவிடுகிறதல்லவா?

காந்திஜியின் குருநாதர் டால்ஸ்டாய். அவரது சமுதாயக் கருத்து கவைக்குதவாதது. அதர்மத்தைக் கண்டும் செயலறச் சொல்லும் உபதேசம் டால்ஸ்டாயினுடையது. அப்படியிருந்தாலும், அவரது நாவல்களில் வரும் ருஷ்ய விவசாயிகளின் சிந்தைமீதும், இதயத்தின்மீதும் டால்ஸ்டாய் தமது கருத்துக்களைச் சுமத்தவில்லை. பேய்க்கதைகளை ஒருவர்க்கொருவர் சொல்லிக்கொண்டு பொழுதைக் கழிக்கும் விவசாயிகளைச் சித்திரித்த அதே டால்ஸ்டாயின் பேனு, நிலப்பிரபுக்களின் நெற்களஞ்சியங்களுக்குத் தீயிட்டு, குத்தகை அடிமைப் பத்திரங்களைக் கிழித்தெறிந்து, நிலப்பிரபுக்களைக் கொல்ல விரைந்தோடும் விவசாயிகளை, அப்படியே படம் பிடித்துக்காட்டத் தயங்கவேயில்லை. விளைவென்ன? டால்ஸ்டாய் பேனு டால்ஸ்டாயை நிராகரித்தது, உலக இலக்கியத்திலே செங்கோலோச்சி வருகிறது

அருமையான வெற்றி இது. இதை எப்படிச் சாதிக்கிருர்கள் பால்ஸாக்கும், கதேயும், டால்ஸ்டாயும், பாரதியும்? யதார்த்த வாதத்தை அடிப்படையாகக் கொண்டெழுந்த வரம்பற்ற கற்பனுவஸ்தையைக் கொண்டு! அதன் முன்னே, கவிஞர்களின், கலைஞர்களின் மனதில் படிந்துறைந்துபோன சொந்தக்கருத்துக்கள்கூட நிலை பெயர்ந்து விலகிவிடுகின்றன. செல்லமா

கப் பேணும் சொந்தக் கருத்துக்குத் தக்கபடி ஒரு கற்பனை உலகை இலக்கியத்தில் சிருஷ்டிக்காமல், தங்களுக்கு எவ்வளவோ கசப்பாயிருந்தாலும் கவலைப்படாமல், உலகத்தைப் பிரதிபலித்து அதில் அலைபாயும் கருத்துக்களை இலக்கியத்தில் பொறிக்கின்றனர். மக்களிடம் சாகா வரம் பெறுகின்றனர்.

"உலகம் ஒரு சந்தை; சந்தையின் சந்தடி நமது உடம்புக்கு ஒத்துக்கொள்ளாது" என்று "உள்ளத்தூய்மை" கொண்டாடித் திரியும் எழுத்தாளர்களுக்கு இந்த வெற்றி கிட்டாது. "மக்கள் ஒரு மந்தை; மந்தையிலே நம்மைப்போன்ற மனிதன் இருந்து நடமாடலாமா" என்று ஓடிப்போகும் கலைஞனுக்கு இந்த வெற்றி கிட்டாது. தனது ஆசாபாசங்களுக்கும், விருப்பு வெறுப்புகளுக்கும்கட்டுப்பட்டு யதார்த்த உலகின் செயலையும் சிந்தனையோட்டத்தையும் சித்திரிப்பது பிரச்சாரக் குப்பை என்று உதாசீனப்படுத்துகிற கலைஞர்களுக்கு இந்த வெற்றி கிட்டாது.

அதனால்தான் சொல்கிறேன்: உன்னுடைய சொந்தக் கருத்தைப்பற்றி எனக்கு அவ்வளவாகக் கவலையில்லை; உனது கலைச்சிருஷ்டியைப்பற்றி, அது பிரதிபலிக்கும் யதார்த்த உலகைப்பற்றித்தான் நான் கவலைப்படுகிறேன் என்று.

சிறந்த இலக்கிய கர்த்தா ஆவதற்கு நீ மார்க்ஸிஸ்ட் ஆக இருந்து தீரவேண்டுமென்கிற விதியில்லை. அப்படியில்லாமலே இலக்கிய மன்னர்கள் எத்தனையோ பேர் இருந்திருக்கின்றனர்.

மார்க்ஸிஸ்ட் ஆக இருந்தால் உனது வேலை சுலபமாகும், உனது சிருஷ்டியிலுள்ள சிரமங்கள் குறையும், தெளிந்த பார்வையும் துணிந்த நடையும் சேரும், அவ்வளவுதான்.

நீ உண்மையிலேயே யதார்த்தவாதக் கலைஞனாக இருந்தால், இலக்கியப் பிரயாணத்தைத் தொடங்கும்போது மார்க்ஸிஸ்டாக இல்லாமற் போனாலும் காலம்,களம்,கலை, கற்பனை ஆகிய பற்றுக்கோடுகளின் உதவியால் நீயே மார்க்ஸிஸ்ட் ஆகிவிடுவாய். அது உனது பரிணாம வளர்ச்சி. உன்னை அடித்துப் பழுக்கவைக்க யாரும் இங்கில்லை. அவ்வளவுதான்.

"ஜெகத்தினை யழித்திடுவோம்" என்று பாரதியை எழுதும்படி யாராவது ஒரு சர்வாதிகாரி சவுக்கடி கொடுத்து நிர்ப்பந்தித்தானா? இல்லை. காலத்தால் காய் கனிந்துவிடுவதுபோல, கலைக் கற்பனையிலே அவசமாகிக் கருத்து அப்படிக் கனிந்துவிட்டது.

இந்த இலக்கியத்தைப் பிரச்சாரம் என்று நிந்தனை செய்து நிராகரித்துவிட முடியுமா? நேற்றைய தினம் பிரச்சாரமாயிருந்தது இன்றைய தினம் உண்மையாகிறது, இன்றைய தினம் பிரச்சாரமாயிருப்பது நாளைய தினம் உண்மையாகிறது. சத்தியத்தின் சோதனையும், சாதனையும் இதுதானே தவிர வேறு இல்லை.

வாழ்விலுள்ள எல்லா கருத்துக்கூறுகளையும், செயலோட்டங்களையும், அவற்றின் விளைவுகளையும் அப்படியே ஒன்றுக்கொன்று தொடர்புபடுத்திப் பார்த்து அவற்றின் வளர்ச்சிப் போக்கைச் சித்திரிக்கப் பாருங்கள்! சொந்த விருப்பு வெறுப்புகளை மூட்டை கட்டி மூலையிலெறிந்து விட்டு முன்வாருங்கள், பார்க்கலாம்!

அப்பொழுதுதான் பாரதியின் மகத்தான வெற்றியை உங்களால் புரிந்து கொள்ள முடியும்.

பாரதி ஒரு கவிச்சக்கரவர்த்தி என்று புகழ்ந்தால் புரியாது.

வாய்மையை வென்ற கவிஞன் அவன். சத்தியத்தின் வயிர ஒளியைக் கண்கூசாமல் காண முடிந்தது அவனுக்கு—என்று சொன்னால்தான் சரியாயிருக்கும், புரியவும் செய்யும். அப்பொழுதுதான் பாரதியை அளக்கப்போய் நம்மை நாமே அளந்துகொள்வதை உணருவோம்.

எகிப்திய பிரமிட் (Pyramid) பக்கத்தில் போய்நின்றால் அதன் உயரத்தை மட்டுமா அளக்கிறாய், உன்னுடைய உயரமும் தெரிந்து விடுகிறதே!

அதனால்தான் பல பேர் பாரதியை சரிவர அளக்கவே பயப்படுகிறார்கள், எங்கே தம்முடைய குட்டைக்கூனி வடிவழகை மக்கள் தரிசித்துவிடுவார்களோ என்று பயந்து! பாரதி ஒரு வேதாந்தி, பாரதி ஒரு பக்தன், பாரதி ஒரு சீர்திருத்தக்காரன், பாரதி ஒரு பிரச்சாரக் கவி, பாரதி ஒரு கணபதிராயக் கவி, பராசக்திக் கவி—என்றெல்லாம் அத்தைப் பாட்டிக் கதை பேசிக் கொட்டாவி விடுகின்றனர்.

உங்கள் ஆசையின் அளவு அவ்வளவுதான், முயற்சியும் சாதனையும் அவ்வளவுதான்! பாரதியின் உண்மை உங்களுக்கு எவ்வாறு தெரியப்போகிறது?

அவன் உங்களை எப்படிப் பார்க்கிறான்? சொல்ல வருத்தமாய்த்தானிருக்கிறது — அவன் உங்களைப்பற்றி கவலைப்படுவதாகவே தெரியவில்லை. அவன் கவனம் வேறு பக்கம்!

அவன் "கல்லினுக்குள் அறிவொளி" காண்கிறான்!

அவன் "கால வெள்ளத்திலே நிலை" காண்கிறான்!

அவன் "புல்லினில் வயிரப் படை" காண்கின்றான்!

அவன் சேரி, குப்பம், குடிசைக் குச்சுக்களை வட்டமிடுகிறான், அழுக்கும், நாற்றமும் கண்டு மலைக்கவில்லை. அவற்றைத் தனது கோட்டைக் கொத்தளங்கள் என்று பார்க்கிறான். இன்றைக்கும் புதுவையிலுள்ள ஹரிஜன தொழிலாளிகள், விவசாயிகள் வீட்டில் சென்று பாருங்கள். பல குடும்பத்தாருடன் பாரதிசேர்ந்துநின்று போட்டோ படங்களில் காட்சியளிப்பதைக் காணலாம்.

அங்கெல்லாம் போ, நீயும்! குடிசைகளுக்குள்ளே சென்று பார்! அடுப்பங்கரையில் அமர்ந்திருக்கும் பெண்ணைப் பார்த்து "தாயே! உலையில் வேகிறது அரிசியா?" என்று கேளாதே. வேகிறது

அவள் உள்ளம்! விறகுக்கட்டைகளை அடுப்பில் ஏறச் செருகுகிறாள் என்று நினைக்காதே. அவள் நெஞ்சிலே அவை ஏறி அனல் விழுங்குவதைப் பார்! அவள் சமைத்துக்கொண்டிருப்பது குழம்பு அல்ல! புரட்சியை!

இந்தக் கணம் உலர்ந்த சுள்ளியாயிருப்பது, அடுத்த கணம் கொழுந்துவிட்டெரியும் கொள்ளியாவதின் சிருஷ்டி மர்மத்தை, உலக விதியை, யோசித்து அறி! அந்தப் பெண்ணும் அப்படித்தான். ஒவ்வொரு உழைப்பாளியும் அப்படியே.

குடிசைக்கு வெளியே தெருவில் ஊர்வலம். பாரதி உரத்த குரலில் கூவிச்செல்கிறான்: "ஒரு விதி செய்வோம்"! "காப்போம்"! "ஒழிப்போம்"!

ஏன் கூவுகிறான்? புல்லினில் வயிரப்படை காண்பதால்!

அந்தக் கோஷம் இந்த மாபெரும் இருபதாவது நூற்றாண்டின் சிம்ம கர்ஜனை!

* * *

எட்டயபுரம் சமஸ்தானத்தின் கீழ் விவசாயிகள் படும் அவஸ்தைகளையும் கொடுமைகளையும் நேரில் கண்டவன் பாரதி; சமஸ்தான சேவகத்தை உதறித் தள்ளி வெளியேறுகிறான். விவசாயிகளின் உள்ளார்ந்த வேட்கையை, நிலப்பசியை, நெஞ்சு தொட்டு உணர்ந்தவன் பாரதி. விவசாயிகளின் நிலை அப்படி என்றால், பாரதியின் நிலைமை அதைவிட மோசம்.

நாட்டை விட்டோடி ஒவ்வொருநாளும் ஒவ்வொரு கணமும் வறுமைப் பேயுடன் போராடிக்கொண்டிருக்கிறான். "உப்புக்கும் அரிசிக்கும் தினசரி போராடிக்கொண்டே யிருக்க வேண்டியதானால் கவிதைப்பணி எப்படிச் செய்வேன்" என்று பராசக்தியை நொந்துகொள்கிறான். அவனது கவலைகளும், விவசாயிகளின் வேட்கையும் ஒன்றிவிடுகின்றன ஒருநாள்.

எழுத்தாணி நிமிர்ந்து நர்த்தனம் செய்கிறது. அடிவயிற்றின் ஆழத்திலிருந்து வெளிப்படும் யதார்த்தத்தின் குரல் கேட்கிறது:

"காணி நிலம் வேண்டும்"

யதார்த்தம்தான் கற்பனைக்கு அடிப்படை. ஆனால் கற்பனை அத்துடன்கூடவே பிறந்துவிடுகிறது.

"—பராசக்தி
காணி நிலம் வேண்டும்"

என்று பராசக்தியை விளித்ததிலேயே கற்பனை தொடங்கிவிடுகிறது. அவ்வளவே! யதார்த்தத்தின் குரல், விவசாயிகளின் கோஷம், கவிதைக் கற்பனையின் மந்திரசக்தியால் சொப்பன லோகத்தில் பிரயாணம் செய்கிறது. விவசாயிகளை விட்டுச் சென்றுவிடுகிறான் பாரதி. அந்தச் சொப்பனாவஸ்தையிலே பிறந்த மாயாலோகத்தில் வீற்றிருந்து,

"—அங்கு
தூணில் அழகியதாய்—நன்மாடங்கள்
துய்ய நிறத்தினதாய்—அந்தக்
காணி நிலத்திடையே—ஓர்மாளிகை
கட்டித் தரவேண்டும்......"

என்று வேண்டுகிறான். அதிலேயே அழகின் இன்பம் முழுவதையும் அனுபவிக்கத் தொடங்குகிறான்.

"—அங்கு
கேணி யருகினிலே—தென்னைமரம்
கீற்று மிளநீரும்"
"பத்துப் பன்னிரண்டு—தென்னைமரம்
பக்கத்திலே வேணும்;"

என்று கற்பனை வழியே தென்னந்தோப்பில் நுழைகிறான். ஒரு நெட்டைத் தென்னைமரம், இருட்டில் திருடன் ஒதுங்குவதற்குத்தான் லாயக்கு. பத்துப் பன்னிரண்டு தென்னைமரமிருந்தால்தான் அரை இருளும் அரை ஒளியுமாய்ப் படர்ந்த தரையில் படுத்து கற்பனை ரதத்தை ஓட்டிச் செல்லமுடியும். குளிர் நிலவின் முகத்தை நேருக்கு நேராகப் பார்த்தால் அழகில்லை. தென்னங் கீற்றுகளின் இடைவெளிகளின் வழியே பார்த்தால்தான் பூர்ணமாக இரசிக்க முடியும். கீற்றுகள் ஒன்றையொன்று உராய்ந்து கொண்டு சரச சல்லாபங்களில் ஈடுபட்டு 'உஸ்' என்று பெருமூச்சுவிடுவது கவிஞனின் இதயத்துக்கு இதமாகவிருக்கும்......

"...நல்ல
முத்துச்சுடர் போலே - நிலாவொளி
முன்பு வரவேணும்; - அங்கு,
கத்துங் குயிலோசை - சற்றே வந்து
காதிற் படவேணும்; - என்றன்
சித்தம் மகிழ்ந்திடவே - நன்குயிளந்
தென்றல் வரவேணும்,"

என்று 'விர்'ரென்று புஷ்பக விமானம் செல்கிறது. ஏறு, ஏறு ஏறு, - மேலே, மேலே, மேலே!

"பாட்டுக் கலந்திடவே—அங்கேயொரு
பத்தினிப்பெண் வேணும்"

என்கிறான். இந்த மாயா லோகத்தில் பொங்கி நிறையும் அழகும், அருளும், பொருளும் எந்த இயல்பானத் தூய்மையுடன் விளங்குகின்றனவோ அதற்கு இயைந்தவாறு ஒரு பத்தினிப் பெண் வேண்டும் என்கிறான். தன்னியல்பாய், நிர்ப்பந்தமில்லாது, மனோ விகாரங்களில்லாது வாழும் பத்தினிக்கு வள்ளுவன் இலக்கணம் கூறினான்:

"சிறைகாக்குங் காப்பெவன் செய்யு
மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை."

அப்படிப்பட்ட பெண்தான் இந்த மாயா லோகத்தில் காலடி வைக்கலாம். மற்றவர் அனைவரும் நாரத கானத்திடையே கேட்ட அபஸ்வரமாய்த்தான் படுவார்கள்.

"...எங்கள்
கூட்டுக் களியினிலே - கவிதைகள்
கொண்டு தரவேணும்".

என்கிறான். வாழ்வின் கூட்டுக் களியில் அழகுக்கு அழகு சேர்ப்பதும், வலிமைக்கு வலிமையூட்டுவதும் கவிதைகளுக்கு மட்டுமே சாத்தியம். அவை வேண்டும் என்கிறது மனம்.

கூட்டுக்களியும், கவிதையும் கிடைத்துவிட்டது - இந்தக் கனவே எவ்வளவு இன்பமாயிருக்கிறது, நனவாகிவிட்டால் சிவலோகம், வைகுந்தம் வேறு

எதுவும் வேண்டாம். புஷ்பக விமானம் உச்சியைத் தொட்டு விட்டது.

உடனே, கவிஞனின் உள்ளுணர்வில் யதார்த்தத்தின் குரல் பேசுகிறது, எச்சரிக்கிறது. உஷார்! உனது கனவைக் கலைக்க—நீ, அதை நனவாக்குவதைத் தடுக்க — எதிரிகள் சூழ்ந்துவருகின்றனர், இதோ! உஷார்! சுரண்டல் பேய்க் கணங்கள் வாழ்வை மயானமாக்கி, நர்த்தனம் செய்துவருவதைப் பார்! உனது கனவுக்கும் அதே கதி ஏற்படாமல் பார்த்துக்கொள் என்று எச்சரிக்கிறது, அந்தக் காட்டு வெளியினிலே! இன்பத்தில் திளைத்திருந்த கவிஞன் இனந்தெரியாத பயத்துக்கு இரையாகிறான். கெட்ட கனவு கண்டு குழந்தை வீரிட்டு அலறுவதுபோல,

"...அம்மா!
நின்றன் காவலுறவேணும்"

என்று அலறுகிறான். "அம்மா" என்ற சொல்லை பயந்துபோய் தஞ்சமடையும் உணர்ச்சி பாவத்துடன் வாசித்துப் பாருங்கள்.

கற்பனை என்கிற புஷ்பக விமானம் ஏறின வேகத்தைவிட அதிவேகத்துடன் ஜெட் விமானம் போல் கீழ்நோக்கிப் பாய்ந்து, தடார் என்று தரைதட்டி விடுகிறது, இதோ:

"...என்றன்
பாட்டுத் திறத்தாலே - இவ்வையத்தைப்
பாலித்திட வேணும்"

என்று முடிக்கிறான். வையத்துக்கு வந்துவிட்டான், விவசாயிகள் அவனைச் சூழ்ந்து கொண்டு விட்டார்கள். அவர்களைப் பாலித்திட எண்ணுகிறான்.

"எனது தொழில் கவிதை,
நாட்டுக் குழைத்தல்".

கவிதையே தொழில். படைப்புக் கடவுளர்களாகிய உழைப்பாளிகள் செய்யும் தொழில்களுக்கு எவ்வளவு மதிப்பு உண்டோ அதே மதிப்புத்தான் தனது தொழிலுக்கும்—என்று அடக்கத்துடன் கூறிக்கொள்கிறான். இந்தத் தொழிலை மேற்கொண்டு நாட்டுக் குழைக்கிறேன் என்கிறான்.

காணி நிலம் வேண்டும்!—எவ்வளவு நியாயமான கோரிக்கை என்று போற்றிப் போராடி வந்தோம்.

அந்தக் கோஷம் கவிஞனின் மந்திரக்கோலால் பூர்ணத்துவம் பெறுகிறது.

காணி நிலம் வேண்டும்—எவ்வளவு அழகான கோரிக்கை, என்று வியக்க வைக்கிறது நம்மை.

அகத்திலே அழகும், தோளிலே வலிமையும் கூட்டித் தருகிறான் நமக்கு—இன்னும் வீரத்துடன் போராட!

உண்மைக் கவிதையின் இலக்கணம் இது. அந்தக் கவிதையின் மர்மசக்தி அதன் கற்பனையழகிலே பொதிந்துள்ளது.

நியாயத்தை அடியொற்றித்தான் அழகு பிறந்து நடக்கமுடியும் என்பதையும் உண்மைக்கவி யுரைத்துவிட்டான். சமுதாய

நியாயத்தைக் கைவிட்டால், வரட்டுக் கற்பனையும், வார்த்தை மயக்கும்தான் மிஞ்சும்.

இந்த உண்மையை இயல்பாக உணரும் கலையுள்ளம் படைத்தவர்கள் உழைப்பாளி மக்களே, கருத்தாலும் கரத்தாலும் உழைக்கும் மக்களே! பாரதியின் மேதையை தரிசித்தவுடனே அடையாளங் கண்டு கொண்டு முதலில் போற்றியவர்கள் தமிழ்மக்களே. சமுதாய விரோதிகள் அவன் கவிதையைப் பிரச்சாரம் என்றார்கள். நடிப்பு மனிதர்கள் அவனை விளங்காத ஒரு புதிராகவே இன்றும் பாவிக்கின்றனர்.

காணி நிலம் வேண்டும்—வெறும் அரசியல் கோஷமா? இருக்கலாம். ஆனல், உள்ளோட்டமாய் அதனிடையே அழகுணர்ச்சி பொதிந்து நிறைந்திருக்கிறது. அதை வெளிப்படை யாக்குகிருய், நீ, பாரதி! உழைப்பாளிகளின் உள்ளத்திலே உறையும் அழகுணர்ச்சியை உனது கவிதைக் கோலின் மந்திரசக்தியால் வெளிக்கொணர்ந்துகாட்டிவிட்டாய்.

பாரதி, உன்னை வணங்குகிறேன்.

வெட்சியும், கரந்தையும்

மார்க்ஸீயத்தின் சரித்திரப் பார்வையைத் தமிழகத்தின் வரலாறு மெய்ப்பிக்கிறதா? அல்லது பொய்ப்பிக்கிறதா?

ஆதிகாலத் தமிழகத்தில், கூட்டுச் சொத்துரிமை நிலவியதா? தாய் வழிச் சமூக ஏற்பாடு அமைந்திருந்ததா? பூர்வீகக் கம்யூனிஸம் பூத்திருந்ததா?

அவை இருந்து தகர்ந்த பின், தனி உடைமையும் அரசும் வர்க்கங்களும் வர்க்கப் போர்களும் தோன்றினவென்று கூறுவதற்கு ஆதாரமுண்டா?

பொருளுற்பத்திச் சக்திகளுடைய வளர்ச்சியின் அடிப்படையில், தமிழர் சமுதாய அமைப்பு மாறிவந்திருப்பதாகக் கூறுவதற்கு ஆதாரம் உண்டா?

வர்க்கப் போராட்டத்தின் மூலமே, நாம் சோஷலிஸத்தை நோக்கி முன்னேற முடியுமென்ற மார்க்ஸீயக் கருத்து இந்தியர்களின் மேதா விலாசத்துக்கும் ஒவ்வாத கருத்து அல்லவா?

இத்தகைய கேள்விகளுக்கு விஞ்ஞான ரீதியான விடை காண்பது, தமிழகத்தின் மார்க்ஸீய வாதிகள் முன் உள்ள கடமையாகும்.

இதைக் கருத்தில் கொண்டு, இந்தப் பணிக்கு உதவி புரியும் வகையில், முறையாகக் கட்டுரைகள் வெளியிடத் தீர்மானித்துள்ளோம். "வெட்சியும் கரந்தையும்" என்ற தலைப்பில் திரு. எஸ். ராமகிருஷ்ணன் எழுதும் தொடர் நிலைக் கட்டுரையின் முதல் பகுதியை இந்த இதழின் 17ம் பக்கத்தில் வெளியிட்டிருக்கிருேம்.

பிரெஞ்சுக் கதை

ஞானஸ்நானம்

மூலம் :
மாப்பஸான்

தமிழாக்கம் :
என். பாஸ்கரன்

“வாருங்கள் டாக்டர்! கொஞ்சம் பிராந்தி சாப்பிடுங்கள் !”

“பிராந்தியா! கொடு. அதைக் குடிப்பதில் எனக்குத் தடையே இல்லே.”

கடற்படையிலிருந்து ஓய்வு பெற்ற அந்த டாக்டர், பிராந்தி ஊற்றப்பட்ட கிளாஸ் டம்ளரைக் கையில் பிடித்துக்கொண்டு அதை முகத்தருகே கொண்டு வந்து பார்த்தார். அந்த பிராந்தியின் தங்க நிறம் விளக்கு வெளிச்சத்திலே மின்னியது. அதை முகர்ந்து பார்த்துவிட்டு பின்னர் ஒரு வாய் குடித்தார்.

“மது, எவ்வளவு மதுரமான விஷம்! அது தன் கவர்ச்சியினுலேயே மனித இனம் பூராவையும் ஒழித்துக்கட்டும் வல்லமையுள்ள கபடமான கொலேகாரன்.”

“அதன் சக்தி உங்களுக்குத் தெரியாது. ‘மதுபானக் கடை’ என்ற அற்புதமான நாவலே ஒரே வேளே நீங்கள் படித்திருக்க முடியும். ஆனல், என்னேப் போல நேரடியாக அதன் கோர நர்த்தனங்களே உங்களால் அனுபவித்திருக்க முடியாது.

“இந்த வெறியூட்டும் மதுவினுல் நடந்த பயங்கரமான விளேயாட்டினுல், ஒரு குடும்பமே எப்படி அழிந்து நாசமாகப்போயிற்றென்பதை நான் என் கண்களினுல் கண்டிருக்கிறேன். அந்த சோகக் கதையைக் கேளுங்கள்.

“அப்பொழுது நான் ஒரு வருட லீவில் சொந்த ஊருக்கு வந்திருந்தேன். * (Britanny) பிரிட்டானியில் உள்ள சிறு கிராமத்தில் என் அப்பா விட்டுப் போன அந்த வீட்டில் தங்கியிருந்தேன். அந்தப் பக்கத்தில் காற்று மிக அதிகம். இங்கேயும் அங்கேயும் நின்றிருக்கிற ‘ஒற்றைக்கல் கம்பங்களே’க் கண்டால் அவை உயிர் பெற்று நம்மிடம் வந்துவிடுமோ என்கிற எண்ணமெல்லாம் எனக்கு உண்டாவதுண்டு! அதைச் சுற்றியிருக்கிறகடல் ஓய்வில்லாது ஓலமிட்டுக்கொண்டே இருக்கும்! செம்படவனுக்காகக் காத்திருக்கும் நாயைப்போல, பொங்கும் கடல் நுறைகள் வட்டமிட்டுக் கொண்டிருக்கும்!

“போகும் ஓடங்கள் பலவற்றை கடலின் சக்திமிக்க அலேகள் கவிழ்த்து நாசம் விளேவித்துக் கொண்டிருந்தாலும்கூட, அதற்குச் சளேக்காமல் அங்குள்ள மனிதர்கள் ஓடத்தில்

* பிரான்ஸ் நாட்டில் உள்ள ஒரு மாகாணம்.

போய்க்கொண்டே இருப்பார்கள். கடல்களில் நீண்ட சங்கிலிக் கற்பாறைகள் காணப்படும். கொஞ்சம் குடித்துவிட்டால் எங்களுக்கு எதுவுமே தெரிவதில்லை!" என்று அவர்கள் சொல்வதுண்டு.

"அந்தக் கிராமத்தில் யார் வீட்டுக்குப் போனாலும் குடும்பத்தின் தந்தையைக் காண முடியாது. அங்கிருக்கும் பெண்ணை எங்கே உன் புருஷன் என்று கேட்டால் அந்தக் கருங்கடலைச் சுட்டிக் காட்டி முணுமுணுப்பாள். 'ஒரு நாளிரவு அவன் அதிகமாகக் குடித்துவிட்டு படகிலேறிச்சென்றான். பின்னர் திரும்பி வரவே இல்லை. அப்படியேதான் என் மூத்த மகனும் சென்றான். எனக்கின்னும் நான்கு பையன்கள் இருக்கின்றனர். இனிமேல், அவர்களும் போய்விடுவார்கள்!' என்று சோகம் கலந்த குரலில் கூறுவாள்.

"அந்தப் பழைய கிராமாந்திரத்து வீட்டில் நான் தங்கியிருந்தேன். என்னுடன் ஒரு கிழமாலுமி வேலைக்காரனாக இருந்தான். அவனைத் தவிர்த்து நான் அந்த வீட்டில் இல்லாவிட்டால் வீட்டைப் பார்த்துக்கொண்டு தோட்டத்தையும் கவனித்துக் கொண்டிருந்த ஒரு குடும்பமும் இருந்தது. ஒரு தோட்டக்காரன். அவன் மனைவி. அவன் தங்கை. ஆக மூவர்.

"கிருஸ்துமஸ்" சமயத்தில் அந்தத் தோட்டக்காரன் மனைவிக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அவன் என்னிடம் வந்து என்னை அந்தக் குழந்தைக்கு 'ஞானத் தகப்பனாக' இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டான். என்னால் மறுக்க முடியவில்லை. எனவே இசைந்தேன். 10 பிராங்க் பணம் கேட்டான், 'ஞானஸ்நான' செலவுகளுக்காக; தந்தேன். ஜனவரி மாதம் இரண்டாம் தேதி அந்த 'வைபவம்' வைக்கப்பட்டது. அதற்கு ஒரு வாரத்திற்கு முன்பிருந்தே அங்கே கடுங்குளிராக இருந்தது. அந்தக் கிராமமே பனிக்கட்டியால் மூடப்பட்டது போலக் காணப்பட்டது.

"அன்று காலை 9 மணிக்கே தோட்டக்காரன் கரெந்தெக் (Kerandek) அவன் மைத்துனி 'கெர்மாகன்' குழந்தையை ஒரு கம்பளியில் சுற்றித் தூக்கிக் கொண்டிருந்த ஒரு நர்ஸ் ஆகிய மூவரும் என் வீட்டிற்கு வந்துவிட்டனர்.

"நாங்கள் கோவிலுக்குப் புறப்பட்டோம். கொல்லும் குளிரால் உடம்பெல்லாம் நடுங்கியது. முகமெல்லாம் குத்தலெடுத்தது. நான் அந்தக் குழந்தையையே நினைத்துக் கொண்டிருந்தேன். வேலைக்காரர்களின் குழந்தைகளெல்லாம் இரும்பினால் செய்யப்பட்டவைகளோ என்னவோ. இல்லையெனில் அது பிறந்தவுடன் இவ்வளவு தூரத்திற்கு நடக்கவேண்டியிருப்பானேன்!

"நாங்கள் கோவிலையடைந்து விட்டோம். எனினும் கோவில் சாத்தப்பட்டிருந்தது. சாமியார் இன்னும் வரவில்லை.

"குழந்தையைத் தூக்கி வந்த

நர்ஸ் கதவருகிலுள்ள ஒரு கல்லின் மீது உட்கார்ந்து கொண்டு குழந்தைமீதிருந்த உடுப்புகளைக் கழட்டினுள். ஒரு வேளை நனைந்திருக்கிற உடம்பைத் துடைக்கத்தான் கழட்டுகிருளோ என்று நினைத்தேன். ஆனுல் குழந்தையை அம்மணமாகவே விட்டுவைத்திருந்தாள். இந்தப் பைத்தியக்காரத் தனத்தைப்பார்த்து எனக்கு ஆத்திரம் வந்தது "உனக்குப் பைத்தியமா என்ன? குழந்தையைச் சாகடித்து விடாதே" என்று கத்தினேன். "இல்லை ஐயா, கடவுளைக் காண குழந்தை நிர்வாணமாகத்தான் இருக்க வேண்டும்" என்று அமைதியாகப் பதிலளித்தாள்!

"குழந்தையின் தகப்பனும், சித்தியும் ஒன்றும் சொல்லாமல் இதைப் பார்த்துக் கொண்டு நின்றனர். இதுதான் பழக்கமாம்! இதை அனுஷ்டிக்கவில்லையெனில் குழந்தைக்கு ஏதேனும் கெடுதல் நேரிடலாம்! எனக்கு ஆத்திரம் வந்தது. இப்படிச் செய்தால் நான் போய் விடுவேன் என்று மிரட்டி என்னிடமிருந்த துண்டினுல் குழந்தையைப் போர்த்தப் போனேன் ஆனுல் குழந்தையைத் தூக்கிக் கொண்டு நர்ஸ் ஓடி விட்டாள். கொட்டிய பனியின் காரணத்தால் குழந்தையின் உடம்பு நீல நிறமாயிற்று!

"இந்த மிருகத்தனமான பழக்க வழக்கங்களைக் காண அஞ்சி நான் வீடுபோக எத்தனித்தேன். அப்பொழுது சாமியார் மெதுவாக வருவதைப் பார்த்தேன். நான் அவரிடம் ஓடிப்போய் நடந்தவற்றைச் சொன்னேன். அவர் கொஞ்சம்கூட அலட்டிக் கொள்ளலாமல் "என்ன செய்வது இதுதான் பழக்கம். நாம் சொன்னுல் அவர்கள் மாற்றிக் கொள்ள மாட்டார்கள்" என்ருர்.

"கொஞ்சம் வேகமாகவாவது வாருங்களேன்"

"இதற்குமேல் வேகமாக நடக்கமுடியாது" என்றுசொல்லி விட்டார். அவர் கோவிலுக்குள் போனுர். நாங்கள் கதவருகில் காத்திருந்தோம். அந்த நேரத்தில் நான்தான் அந்தக் குழந்தையை விட அதிகம் அவஸ்தைப்பட்டிருப்பேன்.

"கடைசியாக கதவு திறக்கப்பட்டது. ஜெபதபங்கள் முடியுமட்டும் குழந்தை முண்டமாகத்தான் நின்றது! அந்தப் பாதிரியார் மெதுவாக ஆமை வேகத்தில் லத்தீன் வார்த்தைகளை நிறுத்தி நிதானமாகச் சொல்லிக் கொண்டுவந்தார். அவர் அணிந்திருக்கிற வெள்ளை நிற அங்கி மெதுவாக ஆடி அசைந்தது. கொடூரமான, காட்டுமிராண்டித்தனமான கடவுளின் பெயரால் அந்தக் குழந்தையைக் குளிர் சித்திரவதை செய்து கொண்டிருந்தது!

"கடைசியில் எல்லாம் முடிந்தது. நர்ஸ் குழந்தையைத் துணியால் சுற்றினுள். கம்பளிக்குள்ளிருந்து குழந்தை முணுமுணுத்தது.

"நீ வந்து இந்த ரிஜிஸ்டரில்

கையெழுத்திடுகிருயா?" என்ருர் சாமியார்.

"நான் தோட்டக்காரனைத் திரும்பிப்பார்த்து "போ சீக்கிரம் ஏதாவது கொஞ்சம் சூடாகக் குழந்தைக்கு கொடு. இல்லையேல் நிமோனியா ஜுரம் வந்து விடும்" என்று கட்டளையிட்டேன். நர்ஸ் குழந்தையைத் தூக்கிக் கொண்டு முன்னே செல்ல தோட்டக்காரனும் அவன் மைத்துனியும் பின்னே சென்றனர். நான் சாமியார் இருந்த இடத்திற்குச் சென்றேன்.

"நான் 'ரிஜிஸ்டரி'ல் கையெழுத்திடும் பொழுது சாமியார் 5 பிராங்க் பணம் கேட்டார். நான் ஏற்கனவே தோட்டக்காரனுக்கு 10 பிராங்க் பணம் கொடுத்திருப்பதால் இப்பொழுது தர முடியாது என்றேன். அப்படியானல் இந்த ஞானஸ்நானம் செல்லாது, அதைக் கிழித்தெறிந்து விடுவேன் என்ருர் சாமியார். நானும் ஏதோ மிரட்டிப்பார்த்தேன். கடைசியில் கொடுத்துத் தொலைத்தேன்.

"நான் வீடுவந்ததும் எனக்கு அவர்கள் கவலையாக இருந்தது. எனவே 'கரெந்தெக்' வீட்டிற்கு ஓடினேன். அங்கே அவனே அவன் மைத்துனியோ, அந்த நர்ஸோ, யாருமே இன்னும் வந்து சேரவில்லை.

"குழந்தையின் தாய் தனியே படுத்திருந்தாள். இரண்டுநாளாகப் பட்டினி, குளிர் அவளைக் கொன்றுகொண்டிருந்தது.

"எங்கே அவர்கள். ஏன் இன்னும் வரவில்லை" என்று அவளைக் கேட்டேன்.

"அவள் ஆச்சரியமோ, அன்றி ஆத்திரமோ அடையவில்லை. அமைதியாக, அவர்கள் 'ஞானஸ்நான' தினத்தைக் கொண்டாடிக்கொண்டிருப்பார்கள் என்ருள்.

"அதுதான் வழக்கம்! நான் கொடுத்த 10 பிராங்க் எனக்கு நினைவு வந்தது. கோவிலுக்கும் அவர்கள் பணம் கொடுக்கவில்லை. எங்கேயோ அதை வைத்துக் கொண்டு குடித்துக் கூத்தடித்துக்கொண்டிருப்பார்கள், என்று தெரிந்தது.

"குழந்தையின் தாய்க்கு சூடாக ஒரு கோப்பை 'சூப்' அனுப்பினேன். குளிர்காய கணப்புச் சட்டியை அருகில் வைத்தேன். அந்த மிருகங்கள் வந்தால் நன்ருக உதை கொடுக்கவேண்டும் என்று காத்திருந்தேன். 'அவர்கள் கையில் அந்தக் குழந்தை என்ன பாடுபடுகிறதோ' என்ற எண்ணம்தான் என்னில் மேலோங்கி இருந்தது.

"மாலை மணி ஆறு அடித்தது. அவர்கள் வந்தார்களில்லை. அவர்களுக்காக என் வேலைக்காரனை அங்கே காத்திருக்கச் சொல்லி விட்டு நான் படுக்கப்போனேன்.

"பொழுது விடிந்த சமயத்தில் காபியோடு என்னை வந்து எழுப்பினுன் வேலைக்காரன். "காரெந்தைக் என்ன ஆனுன்?" என்று கேட்டேன்.

"கொஞ்ச நேரம் மௌனம் சாதித்தான். பின்னர் திக்கித்

திணறி, "அன்றிரவு நன்ருகக் குடித்துவிட்டான். நேராகக்கூட நடக்க முடியவில்லை. வழியிலேயே விழுந்துவிட்டான். இரண்டு பெண்களும் அப்படியேதான் நிலைதடுமாறும் அளவுக்குக் குடித்துவிட்டார்களாம். அந்தக் குழந்தை எப்பொழுது செத்தது என்றுகூட அவர்களுக்குத் தெரியாது என்று நினைக்கிறேன்" என்ருன் வேலைக்காரன்,

"குழந்தை செத்துவிட்டதா?" என்று துள்ளிக்கொண்டே படுக்கையிலிருந்து குதித்தேன்.

"ஆமாம் ஐயா! செத்த குழந்தையைத் தாயிடம் எடுத்துச் சென்றிருக்கின்றனர். அவள் கதறி அழுதிருக்கிருள். அவளைச் சாந்தப்படுத்த அவளுக்கும் குடிக்க ஊற்றிக் கொடுத்திருக்கிருர்கள்".

"என்ன? அவளையுமா குடிக்க வைத்திருக்கிருர்கள்?"

"ஆமாம். நான் இப்பொழுதுதான் பார்த்துவிட்டு வருகிறேன். பிராந்தி தீர்ந்துவிட்டது. மேற்கொண்டு வாங்க பணமும் இல்லை. எனவே, அங்கு விளக்கெரிப்பதற்காக வைத்திருந்த மண்ணெண்ணெயை ஊற்றி நால்வரும் குடித்திருக்கின்றனர். அதுவும் காலியாகிவிட்டது! இப்பொழுது கரெந்தைக்கின் மனைவி அபாயகரமான நிலையிலிருக்கிருள்."

"நான் கைத்தடியோடு தோட்டக்காரன் வீட்டுப் பக்கம் ஓடினேன். அந்தக் காட்டு மிராண்டிகளை செம்மையாக அடித்துத் துவைக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு.

"நிறைய மண்ணெண்ணெயைக் குடித்துவிட்டு இறந்துபோன குழந்தையைக் கட்டிப்பிடித்துக்கொண்டு கரெந்தைக்கின் மனைவி மரண மூச்சுவிட்டுக்கொண்டிருந்தாள். கரெந்தைக், அவன் மைத்துனி, அந்த நர்ஸ் மூவரும் தரையில் உருண்டு கிடந்தார்கள். தோட்டக்காரனின் மனைவியைக் கவனித்துக்கொண்டிருந்தேன். ஆனல், அவள் பிழைக்கவே இல்லை."

* * *

அந்தக் கிழ டாக்டர் கதையை நிறுத்தினர். பிராந்தி பாட்டில் அருகில் சென்று இன்னெரு டம்ளர் ஊற்றினர். அதை விளக்கருகில் தூக்கிப் பிடித்தார். அந்தத் தங்க நிற பிராந்தி விளக்கு வெளிச்சத்தில் கண்ணாடித் தம்ளரில் புஷ்பராகக் கல்லை உருக்கி ஓடவிட்டதுபோல் காணப்பட்டது. அந்தத் தீப்போன்ற, நாசகரமான திரவ பதார்த்தத்தை மடக்கென்று விழுங்கினர். ★

வெட்சியும் கரந்தையும்

[எஸ். ராமகிருஷ்ணன்]

தமிழுக்கு இலக்கணம் வகுத்த முன்னோர்கள், பொருளை 'அகம்' என்றும் 'புறம்' என்றும் இரு பகுதியாகக் கொண்டனர். காதல் விஷயங்கள் அகப்பொருளில் அடங்கும். கொடை, போர் முதலிய புற நிகழ்ச்சிகள் புறப் பொருளில் அடங்கும். (அகம்- உள்; புறம் - வெளி). புறப் பொருள் இலக்கணத்தில், வெட்சித் திணைக்கும் கரந்தைத் திணைக்கும் அளிக்கப்படும் விளக்கமும், அந்தத் திணைகளுக்கு உரிய செய்யுட்களும், தமிழர்களின் முற்பட்ட காலத்து ஒழுக்கத்தை அறிவதற்குப் பயன் படுகின்றன. (திணை - ஒழுக்கம்)

வெட்சி என்பது ஒரு மரம். அந்த மரத்தின் செந்நிறப் பூவைக் குலச் சின்னமாகச் சென்னியில் சூடியவர் வெட்சியார்; கரந்தைப் பூவை அணிந்தவர் கரந்தையார்.

வெட்சியாருக்கும் கரந்தையாருக்கு மிடையே இன்னொரு வேறுபாடு உண்டு; அதுவே முக்கியமானதும்கூட. வெட்சியாருக்குப் பசுக்கள் கிடையாது; கரந்தையாரோ கால்நடை வளர்ப்புக் கலையைப் பயின்றவர்கள். எனவே, வெட்சித் திணை வெட்சியார் கரந்தையாரின் பசுக்களைக் கைப்பற்றி வினியோகித்துக் கொள்வதைப் பற்றியும், கரந்தைத் திணை, வெட்சியார் கவர்ந்த பசுக்களை மீட்டலைக் குறித்தும் விவரிக்கின்றன.

வெட்சியார், கரந்தையார் என்றஇரண்டு குலங்களே இருந்தன வென்று பொருள் கொள்வது

தவருகும். அவர்களைப்போல, வெவ்வேறு குலச்சின்னங்களைப் படைத்த பல்வேறு குலங்கள் இருந்திருக்க வேண்டும். ஆனால் பசு வளர்ப்புக் குலங்களின் பிரதிநிதியாக கரந்தையாரையும் அவர்களின் பசுக்களைக் கவர்ந்த இதர குலங்களின் பிரதிநிதியாக வெட்சியாரையும்கொண்டு, பசு வளர்ப்புக் குலங்களுக்கும் இதர குலங்களுக்குமிடையே நிகழ்ந்த போராட்டங்கள் பற்றிய செய்யுட்களை வகைப்படுத்திய தொல்லோர் திணைப் பாகுபாடு செய்திருக்கவேண்டும். எனவே, வெட்சித் திணை, ஆநிரைச் செல்வத்தைப் படைத்திராத குலங்கள் பசு வளர்ப்புக் குலங்களின் பசுக்களைக் கைப்பற்றியதை விவரிப்பதாக நாம் கொள்ளவேண்டும். அதைப்போலவே, கால்நடை வளர்ப்புக் குலங்கள், தாம் இழந்த ஆநிரைகளை மீட்பதற்காக எடுத்த முயற்சிகளை கரந்தைத் திணை விவரிப்பதாக நாம் கொள்ளவேண்டும்.

பூர்வீகக் குலங்கள் ஒன்ருேடொன்று போராடிக்கொண்டிருந்தன. விவசாயமும் கைத்தொழிலும் பொருளுற்பத்தித் துறைகளாக நிலைகொள்ளாத காலத்திலும் நிலத்திலும், ஒரு குலம் இன்னெரு குலத்தின் பொருட்களைக் கவர்வதற்காகப் போராடுவது இயல்பாக இருந்தது. எனவே, கால்நடை வளர்ப்புக் குலங்களுக் குள்ளேயும், ஆநிரைச் செல்வத்தைப் பெருத குலங்களுக் குள்ளேயும் போர் நடக்கவில்லையென்று நாம்அனுமானிக்கமுடியாது. அந்தப் போர்களைக் குறித்து நேரடியான இலக்கியச் சான்றுகள் தமிழில் இல்லையென்பதே உண்மை. கால்நடைகளைப் பழக்கி வளர்க்கும் கலையைப் பயின்ற குலங்கள் இதர அநாகரீக மக்களிடமிருந்து வேறுபட்ட பின், கால்நடைச் செல்வத்துக்காக நிகழ்ந்த போராட்டங்களே முக்கியமானவையாகும். அவற்றைப் பற்றிய செய்யுட்களை நம் முன்னோர்கள், வெட்சித் திணையிலும் கரந்தைத் திணையிலும் தொகுத்து, அந்தத் திணைகளின் இலக்கணத்தையும் விளக்கியிருக்கிருர்கள்.

புறநானூற்றுச் செய்யுட்களின் ஒழுக்கத்தைப் புலப்படுத்தி, ஒவ்வொரு செய்யுளுக்கும் திணை, துறை விவரம் கொடுத்திருக்கிருர்கள். ஆனல் அந்தத் திணை, துறை விவரம், தொல்காப்பியத்தின் புறத்திணை இயலில் கூறிய இலக்கணத்துடன் சிறுபான்மை ஒத்திருப்பினும், பெரும்பாலும் வேறுபட்டிருப்பதைக் கற்ருேர் அறிவர். புறநானூற்றுச் செய்யுட்களின் பொருள் இலக்கணம், பழைய இலக்கணமான 'புறப்பொருட் பன்னிரு படலம்' என்பதின் வழியில் அமைந்திருப்பதாக அறிஞர்கள் கூறுவர். அந்த நூல் இப்பொழுது அகப்படவில்லை. ஆனல் அதன் வழியில் இயற்றப்பட்டிருக்கும் 'புறப்பொருள் வெண்பா மாலை' இப்பொழுது கிடைக்கிறது. புறநானூற்றுச் செய்யுட்களின்

பொருள் இலக்கணம், வெண்பா மாலையின் கருத்துக்குப் பெரும்பாலும் ஒத்திருப்பதையும் அறிஞர்கள் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். எனவே, புறப்பொருள் வெண்பாமாலை பழைய இலக்கணத்தை எடுததுரைப்பதென்றும், தொல்காப்பியத்தின் இலக்கணம் அதற்குப் பிற்பட்டதென்றும் தெளிவாகும். வெட்சித் திணையையும் கரந்தைத் திணையையும் பற்றி நாம் அறிவதற்கு, வெண்பா மாலையையே பற்றுக்கோடாகக் கொள்ள வேண்டும். இறுதியில், இவை பற்றித் தொல்காப்பியத்திலிருந்து அறிய வேண்டியதையும் நாம் ஆராய்வோம்.

வெட்சியார் கரந்தையாரின் பசுக்களை கவர்ந்து பங்கிட்டுக் கொள்ளும் ஒழுக்கமே வெட்சித் திணை என்பதை முன்பே குறிப்பிட்டோம். இந்தக் காரியம் இரு வகைகளில் நடைபெறலாமென்று வெண்பாமாலை கூறுகிறது; வேந்தன் பணித்துச் செய்வது ஒருவகை; வேந்தன் பணிக்காமலேயே செய்வது இன்னொருவகை. இந்த வேந்தன் என்பது பெருநில மன்னனையோ குறுநில மன்னனையோ குறிக்காது; குலத்தலைவனையே குறிக்கும்.

நாகரிகச் சமுதாயத்தில், அரசன் ஆணையிட்டால்தான் வீரர்கள் போர் செய்யக் கிளம்புவர். வெட்சியாரின் சமூகத்தில் அது நிலைமையல்ல. தேவை ஏற்படும்பொழுது, சந்தர்ப்பம்வாய்க்கும்பொழுது, ஆநிரைகளைக் கைப்பற்றுவது அவர்களுடைய அறம். அதைச் செய்ய, தலைவன் உத்தரவுக்குக் காத்திராமலேயே, வீரர்கள் புறப்படுவார்கள். நாகரிகச் சமுதாயத்தின் அரசாட்சியின் அதிகாரமுறை, வெட்சியாரின் சமூகத்தில் இல்லை என்பதை இது சுட்டிக் காட்டுகிறது.

வேந்தன் பணித்தோ பணிக்காமலோ வேலேந்திய வீரர்கள், வெட்சிப் பூவைத் தரித்து, கிணைப்பறை கொட்டும் ஒலியுடன் படைதிரள்கின்றனர். அதே நேரத்தில், கரந்தையாரின் பசுக்கள் உள்ள காட்டில், கரந்தையாருக்குக் கேடு நிகழ விருப்பதை, காரியென்னும் புள் தன் அழுகையால் அறிவிக்கிறது. இதை 'வெட்சி யரவம்' என்பர்.

வெட்சியார் ஊர் முற்றத்தில் கூடுகின்றனர். கதிரவன் அஸ்தமித்து விட்டான்; இருள்சூழ்ந்து விட்டது. வீரர்கள் கைகூப்பித் தொழுகின்றனர். எடுத்த காரியத்தில் வெற்றி உறுதி என்ற நற்சொல் கேட்டவுடன் கிளம்புகின்றனர். இதை விரிச்சி (நற்சொல்) என்பவர்.

ஊற்முற்றம் என்று வெண்பா மாலை குறிப்பிடுவதைத்தான்,

> "இடுமுள் வேலி எயினர்
> கூட்டுண்ணும்
> நடுவூர் மன்றத்து"

என்று சிலப்பதிகாரம் வேட்டுவவரி குறிப்பிடுகிறது. "முள் வேலியை அடைப்பாகக் கொண்ட மன்றம் அது; அது ஊர் நடுவில் இருக்கிறது. அதில்தான் எயினர் (மறவர்) கூட்டாக

உணவு உட்கொள்வார்கள்" என்பது இதன் கருத்து.

வெட்சியார் தமக்குள் வேற்றுமை பாராட்டாமல் ஒன்று சேர்ந்து உண்டு வாழ்ந்தனரென்பதை இதிலிருந்து அறிகிறோம்.

மறவர்களின் குல தெய்வம் கொற்றவை. வெட்சி வீரர்கள் அவளை வழிபட்டு, அவளுடைய நல்லாசியைப் பெற்றவுடன், பகைவர் நிலத்தை நோக்கிக் காடு கடந்து செல்கிறார்கள். வழியில், அவர்கள், உள்வு அறிந்து வரச்சென்ற தம் சுற்றத்தாரை சந்திக்கின்றனர். பசுக்கள் எங்கே உள்ளன, அவற்றின்எண்ணிக்கை என்ன, அவற்றைக் காவல் காக்கும் விற்படை வீரர் தொகை என்ன ஆகிய விவரங்களை ஒற்றர்கள் வாயிலாகத் தெரிந்த வெட்சி வீரர்கள், முன்னேறிச் சென்று, பகைவர் ஊரை வளைத்துக் கொள்கிறார்கள். அடுத்து நடைபெறுவதை 'ஊர் கொலை' என்று இலக்கண ஆசிரியர் குறிப்பிடுகிறார். ஊர் கொலைத் துறையின் இலக்கணத்தைக் கூறும் வெண்பா :—

"இகலே துணையா வெரிதவழச் சீறிப்
புகலே யரிதென் றூர்புக்குப்—பகலே
தொலை விலார்வீழத் தொடுகழலார்ப்பக்
கொலைவிலார் கொண்டார் குறும்பு."

(பு. வெ. 1-8.)

இதன் கருத்து:—கரந்தையாரிடமிருந்து மாறுபட்டு நின்ற வெட்சியார் வைத்த தீ, கரந்தையார் ஊர் முழுவதும் பரவிச் சீறிப் பாய்ந்தது. பகலில் கரந்தையாரைத் தோற்கடிக்க முடியாது. ஆனால் இப்பொழுது அவர்கள் தோல்வி அடைகின்றனர். கொலைத் தொழிலாற் சிறந்த வில்லினையுடைய வெட்சியார், பகைவர் அரணைக் கைப்பற்றினர்.

ஆநிரைக் கூட்டத்துடன் வெட்சியார் திரும்பி வருகின்றனர். ஆனால் அதற்குள் கரந்தையார் வெட்சியாரைத்தொடர்ந்து வந்து வழி மறித்துப் போராடுகின்றனர். அந்தப் போராட்டத்தில், வெட்சியார் வெற்றி அடைகின்றனர். எதிர்த்த கரந்தையார் பிணமாயினர்.

வீரக்கழல் அணிந்த வில் ஏர் உழவரின் படை, பசுக் கூட்டத்தை, காடு வழியே ஓட்டிச் செல்கிறது.

அதே சமயத்தில், வீரர்களின் சுற்றத்தார்கள் கவலை துறக்கின்றனர். வேடர் குலப் பெண்களுக்கு இடது கண்கள் துடிப்பதால், வீரர்கள் வெற்றியுடன் திரும்புவர் என்று உறுதி கொண்டு, அவர்கள் மகிழ்கின்றனர்.

வீரர்களுக்கு நல்வரவு அளிக்கும் பெண்கள் கொற்றவையை வாழ்த்துகிறார்கள்.

"வார்வலந்த துடி விம்ம
ஊர் புகல நிரையுய்த்தன்று."

வாரால் கட்டின துடி (உடுக்கை) கறங்க, ஊரிலுள்ளோர் விரும்ப, ஆநிரையை மன்றத்துக்குக் கொண்டு செல்கிறார்

கள். அடுத்தபடி, வென்றிப் பொருள் பங்குபோடப்படுகிறது. வென்றிப் பொருளின் வினியோகம் இருவகைப்படும்; (1) பாதீடு (2) கொடை. பாதீடு என்ருல் பங்கிட்டுக் கொடுத்தல் என்று பொருள்படும். கொடை என்ருல் கொடுத்தல் என்று பொருள் படும். இங்கு கொடை என்பது, உரிமையில்லாதவர்களுக்கு இனமாகக் கொடுக்கும் தர்மம் என்று பொருள்படாது.

பகைவர் ஆநிரைகளைக் கவர்வதில் நேரடியாகப் பங்குகொண்டவர்கள் பாதீடுஎன்ற துறைக்கு உரியவர்கள். குலத்தைச்சேர்ந்த இதரர் கொடைத் துறைக்கு உரியவர்கள். பாதீடு என்ற துறையின் இலக்கணத்தை விளக்கும் வெண்பா:—

"ஒள்வாண் மலைந்தார்க்கும்
ஒற்ருய்ந்துரைத்தார்க்கும்
புள் வாய்ப்பச் சொன்ன
புலவர்க்கும்—விள்வாரை
மாறட்ட வென்றி மறவர்தஞ்
சீறூரில்
கூறிட்டார் கொண்ட நிரை"

(பு. வெ. 1, 14.)

இகல் வென்ற மறவினையாளர், தம் சீறூரில்கூடி, ஒளி வீசும் வாள்கொண்டு போராடிய வீரர்கள், ஒற்று அறிந்து வந்து உரைத்தவர்கள், நிமித்தம் தப்பா வகையில் சொன்ன புலவர்கள் (சகுனம் பார்த்துச் சொல்கிறவர்களுக்குப் புலவர் பட்டம்!) ஆகியோருக்கு ஆநிரைகளைப் பங்கிட்டுக் கொடுத்தார்கள்.

கொடை என்பது வேண்டியவர்களுக்கெல்லாம் பிரியத்துடன் பசுக்களைக் கொடுப்பதாகும். துடியன், பாணன், விறலி முதலியோர் கொடை பெறுவர்.

சிலப்பதிகாரம் வேட்டுவ வரியில் எயினர்கள் தமது தொல்குடிப்பிறந்த குமரியைக் கொற்றவையாக அலங்கரித்து, தொழுது பாடுகின்றனர்:—

"இளமா வெயிற்றி இவைகாண்
நின்னையர்
தலைநாளை வேட்டத்துத்
தந்தநல் ஆனிரைகள்
கொல்லன் துடியன் கொளை
புணர் சீர்வல்ல
நல்லியாழ்ப்பாணர் தம்
முன்றில் நிறைந்தன"

"மாமை நிறத்துடைய இளமை பொருந்திய வேட்டுவ மகளே" என்று விளித்து, எயினர்கள் சொல்கிருர்கள், "முன்னுளில் உன் தந்தை முதலியோர் வேட்டையில் கவர்ந்த பசுக் கூட்டங்கள் வேல் வடித்துக்கொடுக்கும் கொல்லன், கிணைப் பறைகொட்டும் துடியன், யாழுடன் பாடும் பாணன் ஆகியோர் முன்றிலின்கண் நிறைந்துள்ளன. நீ காண்பாய்" என்று கூறுகின்றனர்.

மேலும்,

"முருந்தேர் இளநகை காணுய்
நின்னையர்
கரந்தை யலறக்கவர்ந்த
இனநிரைகள்
கள்விலையாட்டி நல்வேய்
தெரிகாவைன்
புள்வாய்ப்புச் சொன்ன கணி
முன்றில் நிறைந்தன".

"கரந்தையார் அலறியோடும் வண்ணம் அவர்களை முறியடித்து, உன் தந்தை முதலியோர் கவர்ந்து கொண்டுவந்த ஆநிரைகள் கள் விற்பவள், ஒற்றன், சகுனப் பொருத்தம் கூறிய

நிமித்தகன் ஆகியோரின் முன்றிலில் நிறைந்துள்ளதைக் காண்பாய்" என்பது இதன் கருத்து.

மேலும்,

"கயமலருண் கண்ணாய்
காணாய் நின்னையர்
அயலூர் அலற எறிந்த நல்
ஆனிரைகள்
தயனில் மொழியின் நரை
முது தாடி
எயினர் எயிற்றியர் முன்றில்
நிறைந்தன."

'உனது ஐயன்மார் அயலூர் விரோதிகள் வருந்திக் கூவும்படி அவர்களைத் தோற்கடித்து விட்டுக் கொண்டுவந்த பசுக் கூட்டங்கள் வயது முதிர்ந்த மறவர், மறத்தியர் முன்றிலில் நிறைந்துள்ளன; நீ காண்பாய்" என்பது இதன் கருத்து.

வெட்சித் திணைக்குரிய வேடர்கள் கவர்ந்துகொண்டு வந்த பசுக்களை, எவ்வாறு பங்கிட்டுக் கொண்டனரென்பதை இந்தப் பாட்டுக்கள் எடுத்துக் காட்டுகின்றன.

பகல் இரவு என்று பாராமல், அபாயத்துக்கு அஞ்சாமல் பகைப்புலம் சென்று உளவு அறிந்து வந்த ஒற்றர்களுக்கு ஒரு பசு அல்லது இரண்டு பசு கூடுதலாகக் கொடுப்பது முறை என்று வெண்பா மாலை கூறுகிறது. சகுனப் புலவர்களுக்கும் தாராளமாகக் கொடுப்பது வழக்கம். பறை கொட்டும் துடியனுக்கு மது வழங்கிச் சிறப்பிப்பதில் குலத்தலைவனுக்கு விசேஷ ஆர்வம் உண்டு.

பசுக் கூட்டத்தைக் கவர்ந்து வந்தவுடன், ஊரில் நடப்பது பாதீடும் கொடையும் மட்டுமா? அல்ல. ஊரில் ஒரே மகிழ்ச்சிக் கூத்தாகத்தான் இருக்கும். வீரர்கள் ஊருக்குள் வருவதற்குள்ளே, மன்றத்தில் புது மணல் பரப்பியும் பசுந் தழையால் பந்தல் வேய்ந்தும் மதுவும் இறைச்சியும் தயார் செய்தும் உண்டாட்டுக்கு ஏற்பாடு செய்வார்களென்பதை ஒரு புறநானூற்றுப்பாடல் (262) எடுத்துரைக்கிறது. வீரர்கள் வந்தவுடன் மதுவுண்டு மனமகிழ்ந்து கூத்தாடுவார்கள். வெற்றி மகிழ்ச்சியில் அவர்கள் கொற்றவையை மறக்கமாட்டார்கள். உண்மையில் கொற்றவையே வீரர்களுக்குத் தலைமை தாங்கி வெற்றியைப் பெற்றுக் கொடுத்தாள் என்பது அவர்கள் நம்பிக்கை.

" ஆனி மணிக்கொடிப்
பைங்கிளிப் பாய்கலைக்
கூனி மலிபடைக் கொற்றவை—
நீனி
அரண் முருங்க வாகோள்
கருதினடையார்
முரண் முருங்கத்தான்
முந்துறும்".

(பு. வெ. 1, 20)

என்பது கொற்றவை நிலைத் துறை வெண்பா.

இதன் கருத்து :—கொற்றவையின் மணிக்கொடியில் சிங்கம் வரைந்திருக்கும். பசுங்கிளியும் கொற்றவைக்குப் பிடித்தமானது பாயும் கலைமானை ஊர்தியாகக் கொண்டவள் அவள். பேய் மிக்க படையை உடையவள். பகைவர் அரணை அழித்து ஆனிரையைக் கொள்ளத் தலைவன்

நினைத்தவுடன், பகைவர்கெட, கொற்றவையே வெட்சி வீரர் களுக்குமுன் எழுந்தருளுவாள்.

ஆண்களும் பெண்களும் கொற்றவையைத் தொழுது மதுவுண்டு மனமகிழ்ந்து கூத்தாடுவதை வெறிக்கூத்து என்பர். இதை 'வெறியாட்டு' என்று வெண்பா மாலை கூறும்; அதற்கு வள்ளிக்கூத்து என்று பொருள் தரும். "வள்ளிக்கூத்து இழிகுலத்தோருக்கு உரியது" என்று நச்சினர்க்கினியர் கூறுவார். வெறிக்கூத்து என்பது காமமும் வென்றியும் பொருளாகக் கொண்ட கூட்டு நடன வகை என்பது வெள்ளிடைமலை. (தொடரும்)

o

எழுத்தாளர்களும் சமூகமும்!

எழுத்தாளர்களும், கலைஞர்களும் நமது சமூகத்தைப் பற்றியும், கற்றுக்கொள்ளவேண்டும். சமூகத்தை ஆக்கும் பல வர்க்கங்களைப்பற்றியும், அவைகளின் நிலைகள் போக்குகள், மனோ தத்துவங்கள் பற்றியும் தெரிந்து கொள்ளவேண்டும். இது மாதிரி சகல அம்சங்களைப்பற்றியும் தெளிவாகப் புரிந்துகொண்டால்தான் அவர்கள் நமது இலக்கியத்துக்கும் கலைக்கும் ஒரு சரியான உருவத்தையும், செழுமையான கருத்தையும் கொடுக்கமுடியும்" —மா சே-துங்

வரலாற்றில் இம்மாதம்

1-11-1858: கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆளுகையில் இருந்த இந்திய நாட்டை பிரிட்டிஷ் அரசாங்கம் தனது ஆட்சிக்குக் கீழ்கொண்டு வந்தது. இந்த ஆட்சி மாற்றத்தை அறிவிக்கும் விக்டோரியா மகாராணியின் பிரகடனத்தை லார்ட் கானிங் விஷேச தர்பார் நடத்தி வாசித்தார்.

2-11-1950: ஆங்கில இலக்கிய மேதை ஜார்ஜ் பெர்னட்ஷா காலமானார்.

7-11-1917: ருஷ்யப் புரட்சி வெற்றி பெற்றது.

8-11-1674: ஆங்கிலக் கவிஞர் ஜான் மில்டன் காலமானார். இவர் ஒரு விடுதலைக் கவிஞர்.

11-11-1914: அமெரிக்க நாட்டு முற்போக்கு எழுத்தாளர் ஹாவார்ட் பாஸ்ட் பிறந்தார்.

11-11-1918: முதலாவது உலக யுத்தம் முடிவுற்றது.

12-11-1866: சீனப் புரட்சியின் தந்தை சன் யாட்-சென் பிறந்தார். சீனக் குடியரசின் முதல் ஜனாதிபதி இவர்.

12-11-1946: இந்திய தேசிய இயக்கத் தலைவர்களில் ஒருவரும், காசி ஹிந்து சர்வ கலாசாலையின் ஸ்தாபகருமான பண்டித மதன் மோகன் மாளவியா காலமானார்.

14-11-1889: இந்தியப் பிரதமர் நேரு பிறந்தார்.

15-11-1862: சிறந்த பல சமூக நாவல்களையும் நாடகங்களையும் இயற்றிப் பெரும் புகழ் பெற்ற ஜெர்மன் கவிஞர் ஹாப்மென் பிறந்தார். இவரது இலக்கியப் பணியைப் பாராட்டி 1912ல் இவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது.

17-11-1928: பாஞ்சால சிங்கம் லாலா லஜபதி ராய் காலமானார்.

19-11-1893: சீன ஜனாதிபதி மா சே-துங் பிறந்தார்.

19-11-1711: ருஷ்ய நாட்டுக் கவிஞரும், புகழ்பெற்ற விஞ்ஞானியுமான மிஹைல் வாசிலேவிச் லோமொனசாவ் பிறந்தார். இவர் முதல் ருஷ்ய சர்வகலாசாலையை 1755ல் ஸ்தாபித்தார்.

20-11-1602! ஜெர்மன் விஞ்ஞானி ஆட்டோ வான் காரிக் பிறந்தார். காற்றடிக்கும் 'பம்ப்'பை இவர்தான் கண்டுபிடித்தார்.

20-11-1910; உலகப் புகழ் பெற்ற ருஷ்ய எழுத்தாளர் லியோ டால்ஸ்டாய் காலமானார்.

28-11-1820: காரல் மார்க்ஸின் துணைவரும், சிறந்த தத்துவாசிரியருமான ஏங்கல்ஸ் பிறந்தார்.

குட்டிக்கதைகள்

இடம் தப்பினல்?

ஒரு வீட்டில் ஒரு அழகான நாய்க் குட்டியும், ஒரு கோவேரிக் கழுதையும் வசித்து வந்தன. நாய்க்குட்டியை வீட்டு எஜமான் மிகவும் பிரியமாக வளர்த்துவந்தார். அவர் சாப்பிடும்போது, கூட இருந்து சாப்பிடும். அவரது மடியில் புரண்டு விளையாடும். இதையெல்லாம் பார்த்த கோவேரிக்கழுதை, நாய் எஜமானரிடம் விளையாடுவதால் தான், அவர் அதன்மேல் பிரியமாக இருக்கிருர் என்று நினைத்தது. தானும் அதேபோலஇருக்க வேண்டுமென்று நினைத்தது. ஒருநாள் எஜமானர் தனியாக அறையில் உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்தார். இதைப் பார்த்த கழுதை, அறைக்குள் நுழைந்து நாய்க்குட்டியைப் போல அவரைச் சுற்றிச்சுற்றி வந்தது. மெல்லக் கனைத்தது. இந்த வேடிக்கையைக் கண்ட எஜமானர் சிரித்தார். இதில் உற்சாகம்கொண்ட கழுதை அவரது தோள்மீது தனது கால்களைப் போட்டுக்கொண்டு முகத்துக்கு நேராகக் கனைத்தது. இந்த கோரத்தைக் கண்டு எஜமானர் பயந்து கூச்சல் போட்டார். வேலைக்காரர்கள் ஓடி வந்து கழுதையைத் தடிகொண்டு தாக்கி விரட்டினர்.

○

அனுகூல் சத்துரு

ஒரு இடையன் தனது ஆட்டுப் பட்டியைக் காத்து வந்த நாயின்மேல் மிகவும் நம்பிக்கை வைத்திருந்தான். தான் வெளியே போகும்போது நாயைப் பரிபூரணமாக நம்பி ஆடுகளை விட்டுவிட்டுச் செல்வான். ஆனல் நாயோ, இடையன் வெளியே போகும்வரைதான் சும்மா இருக்கும். அவன் போனபின்பு ஆட்டுக்குட்டிகளை அடித்துத் தின்பது அதன் வழக்கம். இந்த மாதிரியே நீண்டகாலம் நடத்தி வந்தது. நாயின் துரோகம் ஒரு நாள் இடையனுக்குத் தெரிந்துவிட்டது. அவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. நாயைச் சுருக்கிட்டுக் கொல்ல கயிறை எடுத்து வந்தான். தனக்கு உயிர்ப்பிச்சை அளிக்கும்படி நாய் மன்ருடியது. தன்னைவிட ஓநாய்தான் அதிகம் சாப்பிட்டிருக்கிறதென்று சொன்னது. இதைக் கேட்ட இடையன், "ஓநாய் சாப்பிட்டது உண்மைதான். அது அதனுடைய குணம். ஆனல் உன் நிலை வேறு: ஓநாயிடமிருந்து

ஈசாப்

ஆடுகளைக் காப்பாற்றத் தான், உன்னை சோறு போட்டு வளர்க்கிறேன். ஆகவே உன்னுடைய துரோகம் ஓநாயின் அயோக்கியத் தனத்தைவிட பத்துமடங்கு கேவலமானது. நீ உயிரோடு இருக்க அருகதையில்லை" என்று கூறி நாயைச் சுருக்கிட்டுக் கொன்ருன்.

○

தொட்டிற் பழக்கம்

பள்ளிக்கூடத்தில் படித்துவந்த பையன் ஒரு நாள் புத்தகம் ஒன்றைத் திருடிக்கொண்டு வீட்டுக்கு வந்தான். அதை அவன் தன்னுடைய தாயாரிடம் கொடுத்தான். மகனின் சாமர்த்தியத்தை, தாய் வெகுவாகப் பாராட்டி அவனுக்கு பழம் வாங்கிக் கொடுத்தாள். இதனல் உற்சாகம் அடைந்த பையன், தினசரி பள்ளிக்கூடத்திலிருந்து எதையாவது திருடி வந்தான். சில நாட்களில் பக்காத் திருடனுகவே ஆகிவிட்டான். கடைசியில் ஒரு நாள் பெரிய வழக்கு ஒன்றில் மாட்டிக்கொண்டான். அவனுக்கு மரண தண்டனை கிடைத்தது. தூக்கு மேடைக்கு அவனை அழைத்துச் சென்ற போது ஏராளமான மக்கள் பின் தொடர்ந்து சென்ருர்கள், அவர்களில் அவனது தாயும் இருந்தாள். தேம்பித் தேம்பி அழுது கொண்டு வந்த தாயைக் கண்டதும் அவன், தனது தாயிடம் விடை பெற்றுக்கொள்ள அனுமதிக்கும்படி அதிகாரிகளைக் கேட்டான். அனுமதி பெற்று அவளிடம் சென்று கழுத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டான். ஏதோ இரகசியம் சொல்வதைப் போல பாசாங்கு செய்து தாயின் காதை கடித்துத் துண்டாக்கி விட்டான். அவள் அலறினள், சுற்றிலும் இருந்த மக்கள் ஆத்திரம் அடைந்தனர். அவர்களைப் பார்த்து அந்தத் திருடன், "கொஞ்சம் நான் சொல்வதைக் கேளுங்கள். இன்று நான் தூக்கு மேடைக்கு வருவதற்கு இவள் தான் காரணம். நான் சிறுவனுக இருந்தபோது ஒரு புத்தகத்தைத் திருடிக்கொண்டு வந்தேன். அன்று என்னை இவள் புகழ்ந்தாள். அன்றே என்னைக் கண்டித்திருந்தால் இன்றைக்கு இந்தக் கதிக்கு நான் ஆளாகி இருக்கமாட்டேன் அல்லவா?" என்று கூறினன்.

○

கழுதை காட்டிய வழி

ஒரு நாள் சிங்கம், கழுதை, நரி மூன்றும் ஒன்றுசேர்ந்துவேட்டைக்குப் புறப்பட்டன. வேட்டையில் கிடைப்பதைச் சமமாகப் பங்கிட்டுக் கொள்வதென்று அவைகள் ஒப்பந்தம் செய்து கொண்டன. நன்ருகக் கொழுத்த கலைமான் ஒன்று அவைகளுக்குக் கிடைத்தது. அதைப் பங்கிடும்படி கழுதைக்கு சிங்கம் உத்தரவிட்டது. கழுதை மிகவும் சிரமம் எடுத்துக்கொண்டு சரி சமமாக மூன்று பங்கு போட்டது. தனக்கு மரியாதை அளிக்காமல், மற்றவர்களுக்குக் கொடுப்பதைப் போலவே தனக்

கும் சமபங்கு கொடுத்ததைப் பார்த்த சிங்கம் ஆத்திரம்கொண்டது. கழுதைமீது பாய்ந்து அதைச் சின்னபின்னமாக்கியது. பிறகு நரியைப் பங்கு போடும்படி சொன்னது. நரி தனக்கு இம்மியளவு எடுத்துக்கொண்டு மீதியை சிங்கத்தின் பங்கிற்கு வைத்தது. இதைக் கண்ட சிங்கம் மிகவும் மகிழ்ச்சியடைந்து, "இந்த தன்னடக்கத்தையும் மரியாதையையும் எங்கிருந்து கற்ருய்?" என்று கேட்டது. அதற்கு நரி மிகவும் விநயமாக, "அதோ அங்கே செத்துக் கிடக்கும் கழுதை சொல்லிக்கொடுத்தது" என்று பதிலளித்தது.

○

ஊருக்கு உபதேசம்!

குடியானவன் ஒருவன் தோட்டத்தில் செடிகளுக்குத் தண்ணீர்பாய்ச்சி கொண்டிருந்தான், அப்பொழுது அவனே யாரோ கூப்பிட்டார்கள். வேலே செய்து கொண்டிருந்த மண்வெட்டியை கீழே வைத்துவிட்டு அவன் போனுன். திரும்பிவந்துபார்த்த போது அங்கே மண்வெட்டியைக் காணவில்லே. பக்கத்தில் இருந்த வேலேக்காரர்களேக் கேட்டான். தங்களுக்குத் தெரியாது என்று சொன்னுர்கள். அவன் அதை நம்பவில்லே. வேலேக்காரர்களில் எவனே ஒருவன்தான் அதைத் திருடியிருக்க வேண்டுமென நம்பினுன். உடனே அவர்கள் எல்லோரையும் குறி சொல்லுகிறவனிடம் அழைத்துச் சென்ருன். குறிகாரனுடைய வீட்டுக்குப் போன போது அங்கே ஒரு பெரிய கும்பல் கூடியிருப்பதை அவன் கண்டான்.

குறிகாரனுடைய மாட்டை யாரோ திருடிக்கொண்டு போய் விட்டார்களாம். திருடியது யார் என்று குறிகாரன் அவர்களே விசாரித்துக் கொண்டிருந்தான். இதைப்பார்த்த குடியானவன், "தன் மாடு திருட்டுப்போனதையே இவனுல் கண்டு சொல்ல முடியவில்லே. என்னுடைய மண்வெட்டியைத் திருடியவனேயா இவன் கண்டு பிடித்துச் சொல்லப்போகிருன்" என்று சொல்லிக்கொண்டே வந்த வழியே திரும்பிவிட்டான்.

◆◆

சமூகத் தொண்டு!

"தியாகமின்றி உண்மையான சமூகத் தொண்டு செய்வது சாத்தியம் அல்ல. ஆனுல் அறிவையும், கல்வியையும் போல் தியாக புத்தி அவ்வளவு சுலபமானதல்ல" —வி. ஸ. காண்டேகர்

உற்சவங்கள்

வ. ரா.

எனக்கு, சுமார் ஆறு வயது பூர்த்தியாகி யிருக்கும். அது வரைக்கும், தேர் திருவிழாக்களை யும் உற்சவாதிகளையும் சரியா கப் பார்ப்பதற்கு, சந்தர்ப்பமே ஏற்படட்டதில்லை. உத்தமதான புரத் திண்ணைப் பள்ளிப் படிப்பு, அதற்கு முக்கிய காரணம்.

எங்கள் ஊரில், பிடாரி கோயில் ஒன்று உண்டு என்று சொல்லி யிருக்கிறேன். பிடாரிக்கு, 'காப்புக் கட்டு' உற்சவம். இது அநேகமாக, சித்திரை மாதத்தில் வரும். காப்புக் கட்டை அவிழ்க்கிற அன்றைக்கு, பள்ளு ஆடுவது வழக்கம்; கூத்து ஆடுவதும் உண்டு.

கூத்து என்பது இரவு முழுதும் இருக்கும். பள்ளு அநேகமாக, இரண்டு மூன்று நாழிகை வேலைதான். பிடாரிக்குக் காப்புக் கட்டும் காலத்திலேதான், ஊர் ஜனங்களுக்கு உற்சாகம். கடைசி நாளில், கூத்து இருக்கும்; அம்மன் அதாவது பிடாரி புறப்பாடு உண்டு. அதே நாளில் குடியானவர்களும் ஹரிஜனங்களும் கடா வெட்டி, பொங்கல் இடுவார்கள்.

இந்தக் காப்புக் கட்டுக்காக, அயலூரிலிருந்தும் பந்துக்கள் அழைக்கப்படுவார்கள். ஊர், அந்த ஒரு வார காலத்துக்கு, மிகவும் சுத்தமா யிருக்கும். தோரண அலங்காரங்களை, எல்லா வீடுகளுக்கு முன்னேயும் காணலாம். 'கந்தல் கிழிகள்' இல்லாத துணிகளை, அந்தக் காலத்திலேதான் காணமுடியும்.

பொங்கல் இடுவதற்காக, குடியானவ ஸ்திரீகள், அதிகாலையிலேயே ஸ்னனம் செய்து விடுவார்கள். இவ்வாறு மூழ்குவது அவர்களுடையவழக்கம்அல்ல. கழனி வேலையோ அல்லது கூலி வேலையோ முடிந்த பின்புதான், அவர்கள் நீராடுவது வழக்கம். அதுவும் குளிக்க மட்டும்தான் செய்வார்கள். மாற்றுச் சேலைகள் அனேகருக்கு இருக்காது. எனவே, நீரில் நின்றுகொண்டு, முதுகில் நீரை வாரித் தெளித்து, கைகால்களைக் கழுவிக்கொண்டு, குளிப்பை முடித்துக் கொள்ளுவார்கள்.

கூலிவேலை செய்யும் குடியானவப் பெண்களுக்கும் ஹரிஜனங்களுக்கும் மாற்றுச் சேலைகள் இல்லாததால், அவர்கள் நீரில் அமிழ்ந்து குளிப்பதில்லை என்பது எனக்கு அப்பொழுது தெரியாது. சரியானபடி ஸ்னனம் செய்யச் சோம்பல்படும் முட்டாள் ஜனங்கள் என்று

அவர்களைப் பற்றி, நான் நினைத்துக் கொண்டிருந்தேன்.

என்ன வித்தை செய்வார்களோ, அது எனக்குத் தெரியாது. பிடாரி காப்புக் கட்டுத் திருநாள் முடியும் அன்றைக்கு, இந்த ஏழைப் பெண்கள் புதுக் 'கண்டாங்கிகளை'க் கட்டிக் கொண்டிருப்பார்கள். அவர்கள் சாந்துப்பொட்டு வைத்துக் கொள்ளுவது இல்லை. மங்களூர்க் குங்குமம் என்று இப்பொழுது தெருவில், விற்பனைக்காகக் கூவிக்கொண்டு போகிறார்களே, அதைக்காட்டிலும் உயர்ந்த குங்குமத்தை, அவர்கள் நெற்றியில், விசாலமாக அணிந்து கொண்டிருப்பார்கள்.

ஏழைக் கூலிப் பெண்கள், ரவிக்கை போட்டுக்கொள்ளும் வழக்கம் அப்பொழுது இருந்ததில்லை. பட்டணப் பழக்கமுள்ள ஓரிரண்டு பெண்கள் கிராமத்தில் வாழ்க்கைப்பட்டு, ரவிக்கையோடு, கிராமத்தில் சிறிதுகாலம் தான் தரிசனம் கொடுக்கமுடியும். கிராமத்துக்கு வந்த சில மாதங்களுக்குள், பட்டணத்துப் பெண், தனது ரவிக்கையைப் பறி கொடுத்துவிடுவாள். கிராமப் பிரசாரம் அவ்வளவு கடுமையானது!

அந்தப் பிரசாரத்துக்கு ஒரு சாம்பிள் தருகிறேன். இந்தப் பட்டணத்துப் பெண், அக்கிரகாரத்தின் வழியாகச் சென்றால், எல்லோரும் அவளை உற்றுப் பார்ப்பார்கள். வயது சென்ற பிராமண அம்மாள், அவளைக் கூப்பிட்டு, கிராமத்தில் எப்படி 'அகமுடையானுக்கும் அக்கம் பக்கத்தாருக்கும்' அடங்கி ஒடுங்கி நடக்கவேண்டும் என்பதைப் பற்றி, புராணம் படிப்பாள்.

அக்கிரகாரத்தின் வழியாகத் தான், ஊர்க்குளத்துக்கு, 'கிட்ட அடியாக' போகமுடியும். எனவே, அக்கிரகாரத்துக் கிழவிகளின் வாய்க்கு அஞ்சி, பட்டணத்துப் பெண்கள், ரவிக்கைகளை இழந்துவிடுவார்கள். குடியானவத் தெருவிலும், பட்டணத்து நாகரிகத்தைப்பற்றி, ஓயாத பிரசங்கம் நடைபெறும். "ரவிக்கை சோறு போடுமா?" என்பாள் கூனிக்கிழவி ஒருத்தி. "எங்க நாளிலே, ரவிக்கை ஏது? நகை ஏது? காதோலை கருமணிதான், நாங்கள் கண்டது. தோடு, ரவிக்கை, பூவேலை செய்த கண்டாங்கி, புழுங்கலரிசி பிடிக்காது என்று சொல்ற கதை—இதெல்லாம் இப்பதான்" என்று இன்னொரு கிழவி அடுக்கிக் கொண்டே போவாள்.

பட்டணத்துப் பெண்ணுக்கு, கிராமத்திலே எந்த ஆதரவும் இருக்காது. நல்லவள் போல இருக்கும் கிழவியினிடம் பட்டணத்துப் பெண், ஆதரவுதேடப் போனால், விபரீதமாய்ப் போய் விடும்.

"கிராமத்திலேதான் எல்லாம் விளைகிறது, பட்டணத்திலே, கப்பி ரோட்டுப் புழுதியைத்தான் பார்க்க முடியும். வராட்டி முதல் எண்ணெய் வரையில், கிராமத்

திலிருந்து பட்டணத்துக்குப் போகாவிட்டால், பட்டணம் "அல்லாக்காத்துப் போகும்" (கஷ்டம் அனுபவிக்க வேண்டும்) பட்டணத்துச் சனங்கள் நல்லாச் சாப்பிடறதேயில்லேயே! ரவிக்கை போட்டுக்கிட்டா, உடம்புக்கு வியாதி வருமாம்! அப்படிச் சொல்லிக்கிருக" என்று நீண்ட பிரசங்கம் செய்வாள் கிழவி.

மேலும், பட்டணத்துப் பெண்களுக்கு, கிராமப் பயிர்ச் செலவு வேலை ஒன்றுமே தெரியாது என்பது ஒரு பொதுவான எண்ணமாகும். "என்னுத்துக்குப் பட்டணத்துச் சனியனை விலை கொடுத்து வாங்கிக்கிட்டு வந்து தண்டச் சோறு போடணும்?" என்று குடியானவத் தெருவில், பெரியவர்கள் சொல்லிக் கொள்வார்கள். இப்படி எல்லாம் பேசுவது அந்தக் காலத்து நாகரிகம்.

இவ்வாறு அசட்டுத்தனமாக அவர்கள் அப்பொழுது பேசினதினுலோ என்னவோ, ஒட்டக் கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்ற கதையாக, இப்பொழுது, பெண்கள், 'பாடி' என்றும், ரவிக்கை என்றும் இரண்டு வகைத் தற்காப்புகளை அணிந்து கொள்கிருர்கள்.

பிடாரி கோயில் காப்புக் கட்டுத் திருவிழாக் காலத்தில், பொங்கல் உண்டு, தெருக் கூத்து உண்டு. அதோடுகூட, கரகம் உண்டு. இப்பொழுது கரகத்தில் தண்ணீர் ஒரு சொட்டாவது இருப்பதில்லை. கரகத்தைக் கையில் எடுத்து, இப்பொழுது ஆடுகிருர்கள். சுமார் ஐம்பது வருஷங்களுக்கு முன், கரகத்தில் நீர் நிறைய இருக்கும். தலையில் வைத்துக்கொண்டு ஆடுவார்கள்.

எங்கள் ஊரில், பிரம்பையன் என்று ஒரு பூசாரி இருந்தார். அவர் மிதக் குடிப் பேர்வழி அல்ல. முழுக்குடி ஆசாமி. 'எல்லாம் பிடாரி ஆத்தா 'கிருபை' என்பார் பிரம்பையன். முழுக்குடிப் பிரம்பையன், தலையில் கரகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டால், அவர் வேறு ஆள் ஆகிவிடுவார். உதய சங்கராவது, அஸ்தமன சங்கராவது, பிரம்பையனுக்குச் சரிசமானமாக, கால் போட முடியுமா?

நாகசுரத்தில் கரகப் பாட்டு உதயமாக வேண்டியதுதான்; பிரம்மையனுடைய கால்கள் தாமாகவே, தாளக்கட்டு விடாமல் நர்த்தனம் செய்ய ஆரம்பித்துவிடும். 'கற கற வென்று பறந்து செல்லுது நீலவேணிக் குதிரை' என்று தேசிங்குராஜன் கதையில் சொல்லுவதைப்போல பிரம்பையனுடைய கால்கள் பம்பர ஆட்டம் ஆடும். தலைமட்டும் அசையாது.

இந்த வித்தையைப் பிரம்பையன் எப்படிப் பழகிக் கொண்டாரோ! பிரம்பையன், கையில் பிரம்பு கொண்டு, கரகம் ஆடும் காட்சியைக் காண, சுற்று வட்டாரப் பத்து மைலிலிருந்து, ஜனங்கள் வருவார்கள். கரக நாள் அன்றைக்கு, பிரம்பைய

னுக்கு இருபது துணிகளுக்குக் குறையாமல் கிடைக்கும். ரொக்கமாய், பத்து ரூபாய் கிடைக்கும்.

"இவ்வளவுதானா? இதைப் பெரிதாகப் பேசவேண்டுமா?' என்று சிலர் வியப்போடு கேட்கலாம். ஐம்பது வருஷத்துக்கு முன் கிடைக்கும் பத்து ரூபாய், இப்பொழுது நூறு ரூபாய்க்குச் சரி என்று சொல்லவேண்டும். நூறு ரூபாய் ஒருநாள் இரவில் வருமானம் என்றால், அது சிறிய விஷயமாகுமா?

பிடாரிக்கு விழா வந்தால், ஒரு விபரீதமும் கூட வரும். காப்பு அறுக்கிற நாளில் எருமைக்கடா ஒன்றை பலிகொடுக்க வேண்டும் என்பது சம்பிரதாயமாம்! பிரஸ்தாப வருஷத்தில் தான், இது எனக்குத் தெரியும். தெரிந்தது இப்படித்தான்:

எங்கள் வீட்டில், கறுப்பன் என்ற மகா யோக்கியன் வேலை பார்த்துக் கொண்டிருந்தார். அவர், என் தாத்தாவிடம் பேசிக் கொண்டிருந்தார். "இந்த வருசம், பிடாரி ஆத்தாவுக்கு நல்ல எருமைக் கடாவாகக் கிடைக்காது போலிருக்கு" என்றார் அவர். "நம்ம கோணக் கொம்புக் கடாவைக் கொடுக்கிறது தானே?" என்றார் பாட்டனார். "பலிக்கு வீட்டுமாடு உதவாதுங்க. விலைக்கு வாங்கிப் பலியிடணுங்க" என்றார் கறுப்பன்.

கறுப்பன் சொன்னதில் விகடம் இருக்கிறது என்று எனக்கும் அவருக்கும் அப்போது தெரியவே தெரியாது. விலைக்கு வாங்குகிற மாடும் (ஒரு) வீட்டு மாடுதான்" என்பது கறுப்பனுக்கு எப்படிப் புலப்படாமல் போயிற்று என்றுதான் எனக்கு இப்பொழுது (அப்பொழுதல்ல) சந்தேகம் வருகிறது.

"தாத்தா! நம்ம கோணக் கொம்புக் கடாவையா வெட்டப் போறாங்க?" என்று நான் அழுதுகொண்டே கேட்டேன். என் அழுகையை, பாட்டனாரால் தாளமுடியவில்லை. அந்த வருஷம் எருமைக்கடாப் பலி இல்லை.

தெருக்கூத்தில், பெரும்பாலும் மூன்று நாடகங்கள் தான் நடைபெறும்: ராம நாடகம், அரிச்சந்திர நாடகம், வள்ளி கலியாணம். வள்ளிகலியாணம் பின்னால் வந்து சேர்ந்து கொண்ட நாடகம். அரிச்சந்திர நாடகம் பெரும்பாலும் இருக்கும். இந்த நாடகத்தில் கட்டியக்காரன்தான் விகட கவி. அவனுடைய விகடத்துக்கு ஒரு துக்கடாக் கொடுக்கிறேன்.

'மத்தளத் தோசை கிணுக் கிண்ணு' என்று சொல்லுவான். விகடம் என்ன என்கிறீர்களோ? 'மத்தளத்து ஓசை' என்றும் 'மத்தளத் தோசை' என்றும் பிரிப்பதுதான் விகடமாகும். கூத்து விடிய விடிய நடக்கும். ஊர் வண்ணான் பாடுதான் திண்டாட்டம். அவன்தான், கண் விழித்துக்கொண்டிருந்து, பெரிய அகல் விளக்குகளுக்கு எண்ணெய் வார்த்துக்கொண்டிருக்க வேண்டும். பெட்ரோமாக்ஸ் லைட் அப்பொழுது கிடையாது.

கூத்து ஆரம்பிக்குமுன், கட்டியக்காரன், கூத்துக்கு விஜயம் செய்திருக்கிற பிரமுகர்களின், அந்தஸ்துக் கிரமமாகச் சொல்ல வேண்டும். 'வரிசை தப்பிப் போனால், அவன் கிரிசை கெட்டுப் போவான்' என்று ஊரிலே சொல்லிக்கொள்ளுவார்கள். புதிதாக, அவன், யாரையாவது பிரமுகர்களின் ஜாப்தாவில் சேர்த்துக்கொண்டுவிட்டால், போதும்! அன்றைக்குக் கூத்து நடக்காது. ஏகப்பட்ட குழப்பம்தான். "புதுப் பணக்காரப் பயல் எப்படிப் பிரமுகன் ஆகமுடியும்?" என்று கட்சி பேசுவார்கள்.

புதுப்பணக்காரன் சும்மா இருப்பானா? அவனுக்கு ஆட்கள் இருக்கமாட்டார்களா? ஏகப்பட்ட ரகளைதான். கூத்து நின்றுவிடும். கைக்குத்து துவங்கிவிடும். சமயம் பார்த்து, கூத்துக்காரர்கள் நழுவிவிடுவார்கள். கட்டியக்காரன் பாடு திண்டாட்டம்தான். அவன் யாருடைய தூண்டுதலின் பேரில், புதுப் பணக்காரனை, பிரமுகர்களின் ஜாப்தாவில் சேர்த்தான் என்று மறுநாள் விசாரணை நடக்கும்.

கட்டியக்காரன் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, தெரியாத்தனத்தால், தான் இவ்வாறு செய்துவிட்டதாக, மன்னிப்புக் கோருவான். புதுப் பணக்காரன் தூண்டினான் என்று சொல்லவே மாட்டான்,

கட்டியக்காரனுடைய இந்த இங்கித விளையத்துக்கு, சன்மானம் இல்லாமல் போய்விடுமா? பிடாரிக்காக ஆடும் கூத்து முடிந்த மறுநாள், புதுப்பணக்காரன், தன் சொந்தச் செலவில், தனிக்கூத்து ஒன்று, தன் இடத்தில் வைப்பான். ஊர்ப் பிரமுகர்கள் போகாமலிருக்கலாம். ஆனால், கூத்தை மற்றவர்கள் பகிஸ்கரித்துவிட மாட்டார்கள். நாட்டாண்மைக்காரர்கள் தங்களுக்குள் அடித்துக்கொண்டதால், எளியவர்கள் கூத்தை விட்டுவிட முடியுமா?

அந்தக் காலத்தில், பொம்மலாட்டம் என்று ஒன்று உண்டு. அதை, இப்பொழுது வெகுவாகப் பார்ப்பதில்லை. புளியங்குடிக் குருக்களின் பொம்மலாட்ட செட், மிகவும் பிரசித்தி பெற்றது என்று தஞ்சாவூரில் சொல்லிக் கொள்ளுவார்கள். பொம்மலாட்டம் அநேகமாக, அரிச்சந்திர நாடகமாகவேதான் இருக்கும்.

இந்தப் பொம்மைகளில், சந்திரமதிப் பொம்மையை ஆட்டுவதுதான் ரொம்பக் கஷ்டம். மொத்தம் கயிறுகள் இருபத்தைந்துக்கு மேலிருக்கும். சந்திரமதிப் பொம்மையை ஆட்டிவைப்பவன் நர்த்தனத்தில் தேர்ந்தவனாயிருக்கவேண்டும். சரியான கயிற்றைத் தளர்த்தியோ, சுருக்கியோ, சக்கரவட்டமாக்கியோ, இழுத்தால்தான் பொம்மை நன்றாகவும் பொருத்தமாகவும் 'ஆக்ட்' செய்யும்.

பொம்மலாட்டம் ஒரே இரவில் முடிகிற நாடகம் அல்ல. குறைந்தது பதினைந்து நாட்களாவது பிடிக்கும். ●

—சக்தி, 1943.

பெர்னட் ஷா

*

ஆர். கார்த்திகைவேலு

*

வகுப்பில் ஒரே அமைதி! என்ன நேருமோ என்ற பீதி மாணவர்களிடையே நிலவுகிறது. ஆசிரியர் வகுப்பில் நுழைகிறார். அவர் முகத்திலே கோபக்கனல் கொழுந்துவிட்டெறிகிறது.

ஆசிரியர் : யார் இதைச் செய்தது ? உண்மையைக் கூறிவிடுங்கள். இன்றேல் கடும் தண்டனைக்காளாவீர்கள்.

(மீண்டும் அமைதி ! மாணவர்கள் 'திரு திரு'வென விழிக்கின்றனர்.)

ஆசிரியர் : (மிகுந்த சினத்துடன்) கூறமாட்டீர்களா? சரி! ! (பின் ஒவ்வொருவராக வினவுகிறார். தனக்குத் தெரியாது எனும் பதிலே வருகிறது)

ஆசிரியர் ; (ஒரு சிறுவனை நோக்கி) பெர்னட், உனக்குத் தெரியுமா இதை யார் செய்ததென்று ?

பெர்னட் : தெரியும் ஐயா !

ஆசிரியர் : (அவசரத்துடன்) அப்படியானால் உடனே கூறு !

பெர்னட் : (நிதானமாக) அதைத்தான் நான் செய்யமாட்டேன் ! ! !

ஆசிரியர் : (பொங்கியெழும்

ஆத்திரத்துடன்) என்ன??? சொல்லமாட்டாயா? இதனால் என்ன நேரும் தெரியுமா உனக்கு?

பெர்னாட்; என்ன நேர்ந்தாலும் சரி, ஐயா நான் கோள் சொல்லமாட்டேன்!!!

ஆசிரியருக்கு ஒரே திகைப்பு! என்ன செய்வதென்றே புரியவில்லை. அவர் அனுபவத்திலேயே இது புதிது! நிகழாததொன்று நிகழ்ந்து விட்டது! இதர ஆசிரியர்கள் அறிந்தனர் இதை. அவர்களுக்கும் என்ன செய்வதென்று தெரியவில்லை. அவர்கள் அனுபவத்தில்கூட, ஏன், அப்பள்ளியின் வரலாற்றிலேயே நடைபெறுத சம்பவமிது. மாணவர்களெல்லாம் பெர்னடுக்குக் கடுமையான தண்டனை கிடைக்குமென எண்ணினர். ஆனால் ஒன்றும் நிகழவில்லை.

இந்தச் சின்னஞ்சிறு சம்பவம், ஓர் பள்ளியின் ஆசிரியர் குழாமையே, நிர்வாகத்தையே திணறடித்த சம்பவம், ஜார்ஜ் பெர்னாட்ஷாவின் பள்ளி வாழ்விலே நடந்தது. கோள் சொல்ல மறுத்த பத்தாண்டுப் பாலகன் தான்ஷா. இதன் முடிவுபற்றி ஷாவே கூறுவதைக் கேட்கலாம்.

"ஆசிரியர் குழாத்திற்கு இது ஓர் புதிய அனுபவம். ஏதாவதொரு காரியத்தில் என்ன செய்வதென்று புரியாத நிலையில் முன்பு என்ன செய்யப்பட்டதோ அதைத்தான் அதிகாரிகள் செய்ய இயலும். நானே என்றுமே நடவாத ஒன்றை நடத்தி விட்டேன். எனவே அவர்கள் ஒன்றும் செய்யவில்லை. ஆனால் இவ்வித விசாரணைகள்மட்டும் அன்றுடன் ஒழிந்தது. இது தான் எனது முதல் சீர்திருத்தம்".

தனது பத்து வயதிலே, பள்ளிப் பிராயத்திலே, தவறெனப் பட்டதைத் தைரியமாகஎதிர்த்து நின்று, பின்காலத்தில் தனது முதல் சீர்திருத்தம் அது எனப் பெருமையுடன் கூறிக்கொண்ட ஷா, தன் வாழ்நாள் முழுவதும் தனக்குத் தவறெனப் பட்டதைத் தயை தாட்சண்யமின்றித் தைரியமாக எதிர்த்துவந்தார். பள்ளியில் கோள் சொல்லவைப்பதை, பால பருவத்திலே எதிர்த்துநின்று அதிலே வெற்றி கண்டு அதைத் தன் முதல் சீர்திருத்தமெனக் கூறிய ஷா, சமுதாயத்தையே சீர்திருத்தி புதியதோர் வாழ்வை உருவாக்கத் தனது பேனாவின் துணையுடன் தன் வாழ்நாள் முழுதும் போராடினார்.

ஆம்! ஷா ஒரு போராட்டக்காரர்தான். அவரது நவீனத்தில் ஒன்றான, "சமூகத்தில் சேராத சோஷலிஸ்ட்"டில் வரும் டிரெபூஸியஸ் வர்ணிக்கும் "வஞ்சனையும், பொய்யும், பித்தலாட்டமும், லாபவேட்டையும், பணவெறியும் நிரம்பிய சமுதாயத்தின்" கோளாறுகளை எதிர்த்துப் போராடியவர் ஷா. "கலைஞர்களிடத்தில் காதல்" எனும் நவீனத்தில் வரும் ஓவன்ஜாக் கூறுவதேபோன்று "கொடுங்

கோன்மையைக் கண்டித்தும், பொய்யை அம்பலப்படுத்தியும்" வந்தார் தன் வாழ்நாளெல்லாம்.

வரலாற்றின் முக்கியமானதோர் சகாப்தத்தில் வாழ்ந்தவர் கலைஞர் ஷா. முதலாளித்துவ வளர்ச்சியின் உச்சக் கட்டத்தையும், ஏகாதிபத்தியத்தின் கோரத்தையும், சோஷலிஸத்தின் வெற்றியையும் நேரில் கண்டார். முதலாளித்துவ சமுதாயத்தில், "நரகலைத் தின்று ஈக்கள் கொழுப்பதைப்போன்று. சேரிகளின் வறுமையிலே கொழுக்கும் கனவான்களையும், அரைகுறை ஊதியமும், அதிகப்படியான வேலையும் தாளாமல், தங்கள் வயிற்றைக் கழுவிக் கொள்ள, விபசாரத்திலீடுபடும் பெண்களையும்," அந்த விபச்சாரத்தை "முதலாளிகளின் லாபத்திற்காகச் சர்வதேசத் தொழிலாக" நடத்துவதையும் கண்ணுற்றார். "ஒவ்வொரு அங்குல நிலமும், வருமானத்தின் இதர மூலாதாரங்களும் ஒரு சிலரின் கடுமையான பிடிப்பிலே, ஆயுதந்தாங்கிய இராணுவத்தினர், போலீஸாரின் பாதுகாப்பிலிருக்க, தங்களின் ஒட்டி உலர்ந்துள்ள வயிற்றையும் நடுநடுங்கும் உடம்பின் உருப்புக்களையும், பட்டினியால் வாடும் தங்கள் மனைவிகளையும், குழந்தைகளையும் காணும்" மக்களின் நிலையையும், ரோம சாம்ராஜ்யத்தைப்போலவே நவீன ஏகாதிபத்தியமும் "ஏழையைக் கொள்ளையடித்து, பலவீனரைக் கொலை செய்து, சொத்தும் பெருமையும்" சேகரிப்பதை அவர் கண்ணாரக் கண்டார்.

ஷாவின் கலையுள்ளம் இவற்றையெல்லாம்கண்டு சீறியெழுந்தது. இவற்றை எதிர்த்துப் போராட இலக்கியத்தைத் தன் ஆயுதமாகக்கொண்டார் கலைஞர் ஷா. "பணத்தைத் தேடும் அராஜக வெறிச்சண்டைகளை வெறுத்து, சமுதாய அமைப்பின் நிரந்தர அடிப்படை சமத்துவத்தில்தானிருக்க இயலும்" என்பதை உணர்ந்த சோஷலிஸ்ட் ஆனார். முதலாளித்துவ அமைப்பின் அடிப்படையை அலசி ஆராயும் மார்க்ஸின் "மூலதனத்"தைப் படித்துவிட்டு, "என் வாழ்வில் எனக்கு ஒரு குறிக்கோளை மார்க்ஸ் அளித்தார்" எனக் கூறியுள்ளார். அந்தக் குறிக்கோளை அடைய தன் வழியிலே சென்று வாழ்நாள் முழுவதும் தனக்கே உரித்தான பாணியில் சோஷலிஸப் பணியை ஆற்றினார் ஷா.

ஜார்ஜ் பெர்னட் ஷா 1856-ம் ஆண்டு ஜுலை 26 அன்று டப்ளின் நகரில் ஒரு மத்தியதரக் குடும்பத்தில் பிறந்தார். பதினைந்காம் பிராயம்வரை பள்ளியில் பயின்று, பின் ஒரு நிலப் பொறுப்பாளரின் அலுவலகத்தில் குமாஸ்தாவாகப் பணியாற்றினார். பள்ளிப் படிப்பிலோ, குமாஸ்தா வேலையிலோ அவருக்கு ஆர்வமில்லை. குமாஸ்தா வேலையினின்றும், பொருளாளராக உயர்த்தப்படினும் அவ்

வேலையில் அவர் மனம் செல்ல வில்லை. தனது இருபதாவது வயதில் அவ்வேலையை உதறித் தள்ளி விட்டு, லண்டனை அடைந்து, அங்கு தன் தாயுடன் வசித்தார்.

லண்டன் சென்ற பின் ஏறத் தாழ மூன்ருண்டுகள் குறிப்பிடத் தக்க வேலை ஒன்றும் செய்ய வில்லை. பால பருவ முதலே அவர் மனம் காவியத்திலும், ஓவியத்திலும், இலக்கியத்திலும், இன்னிசையிலும் தான் பெரும் பற்றுக்கொண்டிருந்தது. ஷெல் லியின் கவிதைகளிலும், டப்ளின் கலைக்கூடத்தின் ஓவியங்களி லும், சிறந்த பாடகியான தன் தாயின் இசையிலும்தான் இள மைப்பிராயத்தில் அவர் இன்பம் கண்டார். எனவே, பொருள் தேடும் நோக்குடன் ஏதாவது ஒரு வேலையிலமர அவர் இசைய வில்லை. இறுதியில் 1879 ஆம் ஆண்டு முதல் நவீனங்கள் எழுதத் தொடங்கினர். இக் காலத்தில்தான் அவருக்கு அர சியல் தொடர்பும் கிடைத்தது. பல கூட்டங்களில் கலந்து பேசி வந்தார். 1882 ஆம் ஆண்டு 'முன்னேற்றமும் வறுமையும்' எனும் நூலின் ஆசிரியர் ஹென்றி ஜார்ஜின் சொற்பொழிவைக் கேட்டு, "பொருளாதார அடிப் படையின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டேன்" என்கிருர். மார்க்ஸின் 'மூலதனத்'தைப் படிக் காமல் அடிப்படைப் பொருளா தாரப் பிரச்னைகளைப்பற்றி பேச முடியாதென ஒரு கூட்டத்தில் அவரிடம் பலர் கூறியதால், மார்க்ஸின் 'மூலதனத்'தைப் படித்து முடித்து வாழ்க்கையில் தனக்கொரு குறிக்கோள் உண் டென்பதை உணர்ந்தார்.

மார்க்ஸின் 'மூலதனத்'திலே தனது எண்ணங்களையே அவர் கண்டார். எனினும் சரித்திரத் தின் விஞ்ஞானத்தைப் புரிந்து கொள்ளவில்லை. எனவேதான், மார்க்ஸின் பொருளாதாரத் தைக் கைவிட்டு, ஸ்டான்லி ஜெவோன்ஸ் என்னும் முதலா ளித்துவப் பொருளாதாரவாதி யின் கருத்துக்களை ஏற்றுக் கொண்டார். மார்க்ஸிஸ்ட்களின் நிருவனமான ஜனநாயக சம்மே ளனத்தில் சேராமல், பேபியன் சொஸைட்டியில் உறுப்பினராகி, அதன் முக்கியத் தலைவர்களுள் ஒருவராஞர். ஆயினும் மார்க் ஸிடம் அவருக்கிருந்த மதிப்பு சற்றும் குறையவில்லை. அத் துடன் எண்ணற்ற கூட்டங் களில் சோஷலிஸப் பிரச்சாரம் செய்துவந்ததால், மக்களிடம் அவருக்கு மிக நெருங்கிய தொடர்பு இருந்துவந்தது. அவ ரது வரட்டுப் பொருளாதாரக் கோட்பாடுகளும், இயற்கைப் பரிணமத் தத்துவமும் அவரது கலையுள்ளத்தை, மக்களின் மகோன்னத சிருஷ்டி சக்தியிலே அவருக்குள்ள நம்பிக்கையை மாற்றி விடவில்லை. எனவே தான் தனது பேபியனிஸத்தைப் பொய்யாக்கி, மார்க்ஸிஸத்தை நிரூபித்த சோஷலிஸப் புரட்சி ரஷ்யாவில் தோன்றியவுடன், இரு கை விரித்து அதை வர வேற்று, தன் இறுதிக் காலம்

வரை சோஷலிஸ்ட் ரஷ்யாவின் தளரா்த நண்பனுகத் திகழ்ந் தார்.

ஷா ஒரு கலைஞர். இலக்கியத்தைத் தன் கருத்துக்களைக் கூறுவதற்கான கருவியாக, அதனுடைய இலக்கியத் தன்மை மாருமல் உபயோகித்தவர் ஷா. கிண்டலையும், நையாண்டியையும் தயை தாட்சணியமின்றிப் பயன்படுத்தி, தன் இலக்கியச் சிருஷ்டிகளின் மூலம் புரையோடிய சமூகத்தின் கோளாறுகளை அம்பலப்படுத்தினுர். முதல் நான்கு நவீனங்களில் கலையின் பெயரால் நடைபெறும் புரளியையும், பித்தலாட்டத்தையும் தாக்கியுள்ளார். குறிப்பாக 'கலைஞர்களிடத்தில் காதல்' எனும் நவீனத்தில் தாங்கள் கூறுவதை நடைமுறையில் செயலாற்ற இயலாமல், கலையின்பால் தங்களின் பக்தியே தங்களைச் சாமானிய மக்களைவிட ஓர் உயர்ந்த அந்தஸ்திலே வைக்கிறது எனக் கருதும் பொய்க்கலை பக்தர்களை தயை தாட்சண்யமின்றித் தாக்குகிருர். இந்நவீனங்களில் கலையென்பது கலாரசனையில் இன்பம் காணும் ஒன்ருக உருவாக்கப்படாமல், வாழ்க்கையின் பலத்தை வெளியிடும் சிருஷ்டி சக்தியாக நமக்குக் காண்பிக்கிருர். இறுதியாக அவரெழுதிய நவீனமான "சமூகத்தைச் சேராத சோஷலிஸ்ட்"டில் பிறருழைப்பைச் சுரண்டி, அவர்களின் பட்டினியின் மேல் உருவாக்கப்பட்டதே சொத்து என்பதை அம்பலப்படுத்துகிருர் ஷா. மார்க்ஸின் 'மூலதனத்தை'ப் படித்தபின், எழுதிய நவீனம் இது. எனவே அதில் மார்க்ஸின் பிரதிபலிப்பை நாம் காணலாம்.

நவீனங்கள் எழுதுவதைக் கைவிட்டு, ஒன்பது ஆண்டுகள் அயராத அரசியல் வாழ்வுக்குப் பின், நாடகங்கள் எழுத ஆரம்பித்தார். திருமதி வாரனின் தொழில் என்பது அவரது முதல் நாடகம். இதில் விபச்சாரத்தின் அடிப்படையையும், எப்படி, இது பணம் சேகரிக்கும் தொழிலாக நடத்தப்படுகிறது கிறது என்பதையும் அம்பலப்படுத்துகிருர். அதன்பின் எழுதிய "தாரமிழந்தவர்களின் வீடுகள்" சேரிகளை வைத்து நடத்தி, ஏழை மக்களை வாடகை என்ற பேரால் கசக்கிப் பிழியும் கோரக் காட்சியை வர்ணிக்கும் நாடகமாகும்.

இவ்விரு நாடகங்களுக்கும் மாபெரும் எதிர்ப்புத் தோன்றியது; குறிப்பாக 'திருமதி வாரனின் தொழில்' அன்றைய பிரிட்டிஷ் அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டது. பல பத்திரிகைகளும் 'விமர்சகர்களும்' இது கலையில்லை; வெறும் பிரச்சாரக் குப்பை என ஓலமிட்டனர். ஷா இதைக்கண்டு அஞ்சாமல் எள்ளி நகையாடியது மட்டுமின்றி, "இத்தகைய அழுக்குகள் நிறைந்த சமூகத்தினுல்தான் இவர்களெல்லாம் பிழைக்கின்றனர்; எனவேதான் என்னை எதிர்க்கின்றனர்" எனக்கூறி

அவர்களுக்கு இந்த சமுதாயத்தைப் பாதுகாப்பதில் உள்ள அக்கரையின் அடிப்படையை அம்பலப்படுத்தினர்.

பின்னர் எழுதிய 'சீஸரும் கிளியோபெட்ராவும்' எனும் நாடகத்தில், "தன் நாட்டின் ஏழைகளைக் கசக்கிப் பிழிந்து, பிறநாடுகளின் ஏழைகளைக் கொள்ளையடித்து, அவர் தம் நாடுகளையும் ரோமுடன் சேர்த்தது" போல் நவீன ஏகாதிபத்தியமும் செய்கிறது என்று கூறும் எகிப்திய 'ரா' வின் மூலம், இந்த நவீன சாம்ராஜ்யங்களும் காற்றிலே பறந்து விடும் என்றும் உறுதியுடன் கூறியுள்ளார். அதே ரோம சாம்ராஜ்ய மன்னர்கள், கிறிஸ்துவ மதத்தைப் பின்பற்றியவர்களைச் சித்திரவதை செய்த வரலாற்றை, 'அண்டராக்லஸூம், சிங்கமும்' எனும் நாடகத்தில் வர்ணிக்கும்போதே, "தங்கள் நலன்களை எதிர்க்கும் சக்திகளை எல்லாக் காலத்திலும் ஆட்சியாளர்கள் எதிர்ப்பதைத் காண்கிறோம்" எனக்கூறி நவீன அரசியலாரின் போலி ஜனநாயக வேஷத்தை அம்பலப்படுத்துகிறார்.

இங்ஙனம், ஷா தொடாத பொருளே கிடையாது. பேர்லிக் கலை பக்தர்கள் ("கலைஞர்களிடத்தில் காதல்") முதல் ரட்சகப் படை ("மேஜர்பார்பாரா")வரை, முதலாளித்வ அமைப்பின் அடிப்படை ("சமூகத்தில் சேராத சோஷலிஸ்ட்") முதல், நவீன ஏகாதிபத்தியத்தின் அமைப்பு ("சீஸரும் கிளியோபெட்ராவும்") வரை, விபசாரத்தின் காரணம் ("திருமதி வாரனின் தொழில்") முதல் பணத்திற்காக மருத்துவத் தொழில் புரிவது ("டாக்டர்களின் திணறல்") வரை, புதிய கருத்துக்கள் தோன்றுவதை நசுக்கும் ஆட்சியாளர்களின் முயற்சிகள் ("அண்டராக்லஸூம் சிங்கமும்") முதல், பிரபுக்களின் போலிக் கௌரவம்வரை ("பிக்மாலியன்") சகல பிரச்னைகள் பற்றியும் தன் நாடகங்களில் எழுதியுள்ளார்.

இன்றைய சமுதாயத்தில்,தான் கண்ட ஊறுகளை தயை தாட்சணியமின்றி அம்பலப்படுத்தி, அவற்றை எதிர்த்து வந்தார் ஷா. எத்தகைய எதிர்ப்பையும் கண்டு ஷா அஞ்சவில்லை. மார்க்ஸிஸம் பயனற்றதெனக் கூறிய அதே பேபியன் ஷா, ரஷ்யாவில் மார்க்ஸிஸத்தின் வெற்றியைக்கண்டு சீறவில்லை; பாராட்டினர். சோஷலிஸ நாட்டின் நண்பரானர். அதுமட்டுமல்ல; அவ்வழியைப் பிரிட்டனும் மேற்கு நாடுகளும் பின்பற்றித்தானகவேண்டுமென்றும் கூறினர் ஷா. அதனால்தான் "ஐரோப்பாவின் தைரியமான சிந்தனையாளன் ஷா" என கார்க்கி கூறினர். ஆம்! தைரியமாகச் சிந்தித்து, தன் கருத்துக்களைத் தன் இலக்கியச் சிருஷ்டிகள் மூலம் அஞ்சாமல் உலகிற்களித்தவர் கலைஞர் ஷா.

●



பொருளும் அருளும் என்ற தலைப்பில் பெரியார் **திரு. வி.க.** அவர்கள் எழுதியுள்ள பாடலிலிருந்து ஒருபகுதியைக் கீழே தருகிறோம். இதில் வர்ணிக்கப்பட்டுள்ள **வடலையும்—திடலையும்** புதுவாழ்வு பெற்றுவிட்ட சோவியத் நாட்டின் சுந்தரச் சித்திரங்களேயாகும். படித்துப் பார்த்துக் கற்பனை செய்து பாருங்கள்.

★ திரு நாடு ★

வடலை

தோழமை விரும்பி வாழும் நாடு
விண்ணவர் விழையும் வண்ண நாடு
நோன்பிகள் போற்றும் பான்மை நாடு
மலையரண் காட்டரண் நிலையாய் நிற்கவும்
கலையரண் அறவரண் தலையாய் நிற்கவும்
மற்ற அரண்களும் சுற்றி நிற்கவும்
ஓங்கும் நாடு பாங்குள நாடு;
வானம் பொய்ப்பினும் ஈனம் உருதே;
என்றும் ஊற்றுக் குன்றுதல் இல்லை;
தண்ணீர் நிலைகள் கண்ணைக் கவரும்
வாய்க்கால் பாய்ச்சல் ஓய்வெண்ணுது;
பொழில்கள் நிழலை வழிவழி பொழியும்
பழங்கள் வலிந்து வழங்கும் பரிந்து;
விசிறும் கதிர்கள் வேனிற் கோடையில்
பசும்புல் உயர்ந்து பசுக்களை அழைக்கும்;
உழவும் தொழிலும் விழாவா நடக்கும்
நூற்றலும் நெய்தலும் காற்றிலும் நடக்கும்
உணவுடை உறைவிடம் உளம்நினை யாதே
இல்லார் இல்லை கல்லார் இல்லை
எங்கும் மகிழ்ச்சி பொங்கும் பொங்கும்;
மீனின் அழகில் நாரை மூழ்கும்

'கிள்ளை பாடும் பூவை கேட்கும்'
மயில்கள் ஆடலைக் குயில்கள் காணும்
பண்கள் ஆண்களைப் பெண்மை யாக்கும்;
எங்கும் பங்கயம் எங்கும் வண்டுகள்
எங்கும் நல்வினை எங்கும் திருமணம்
எங்கும் திருவறம் எங்கும் அருளறம்
அன்பே நாடும் இன்ப நாடு
நடலை அற்ற வடலை நாடே;

திடலை

மண்ணின் றெழுந்து விண்ணினை நோக்கி
'வருக'என் றழைக்கும் விருந்துக் காட்சி;
பெரும்பெரும் பதிகள் நெருங்கி நிரைந்து
செறிந்தா லென்னச் சிறக்கும் காட்சி;
கணக்கில் மலைக்குலம் இணங்கி நீண்டு
தொடர்ந்து மிடைந்து படர்ந்த காட்சி
வழங்கும் இனிய பழந்திரு நாடு—
செயற்கை சேரா இயற்கை நோக்கும்
இயற்கை வாழ்வும் இயற்கைச் செயலும்
இயற்கைத் தானமும் இயற்கைத் தவமும்
இயற்கை ஞானமும் இயற்கை மோனமும்
வழிவழி வளரும் எழில்மிகு நாடு—
நாடுகள் பதிகள் காடுகள் காக்கள்
உளங்கவர் நீர்நிலை வளங்கொழி புலங்கள்
காவிய ஓவிய பாவிசைக் கலைகள்
அழகு நிலையம் பழகும் பண்புகள்
வளர்ச்சிக் குதவும் வாழ்வுக் கூறுகள்
எடுத்துக் காட்டாய்ப் படிப்பருள் நாடு—
திங்கள் தயவைக் கங்குல் நாடா
ஒளிமரம் காலும் உயர்ந்த நிலவை;
எல்லா ருழைப்பின் ஈகையே உணவுடை
மாந்தர் கைகள் ஏந்தி நில்லா
மாவின் கிளையவ் வேலை செய்யும்;
களிறும் பிடியும் காதல் இலக்கியம்
சராசர மெல்லாம் சாற்றும் அறிவியல்
மக்கள் உறுதி தக்க அரணே
அருளின் ஆட்சி அரசியற் பள்ளி
அருளறம், வாழ்க்கைக் குறிக்கோள் ஆகும்
அண்டை ஊர்பறித் துண்ணல் அற்றது
சீரைப் பெருக்கும் சிறப்பு வாய்ந்தது
பொதுமை பரப்பும் புதுமை உடையது
புடவி போற்றும் திடலை நாடே;

சிறுகதை

பிராயச்சித்தம்

பண்டரிநாதன்

டாங்...டாங்...டாங்...

பக்கத்து வீட்டிலிருந்த சுவர்க் கடிகாரம் மணி அடிக்கத் தொடங்கியது. குளிர்காலத்து இரவு நேரத்தின் ஒலி செத்த அமைதியால், மெல்லிய இசைக் குரல்போன்ற அந்த மணியோசை, கோடைக்காலத்துப் பேரிடிபோல் என் காதில் பாய்ந்தது. ஒலியின் ஓசையை எண்ணத் தொடங்கினேன். ஒன்று, இரண்டு, மூன்று......என்ன, மணி பன்னிரண்டா ?

மணி பன்னிரண்டு. தேய்ந்து செத்த பழைய நாளின் மரணக் குரலும், பிறந்து வளரப்போகும் புதிய தினத்தின் முதல் குரலும் மிக நெருக்கத்தில் இருக்கும் நேரம் அது.

ஆம், உண்மை பொய்யால் நெய்யப்பட்ட எந்த திரையைக் கொண்டும்—இனிய புன்னகையாக இருக்கலாம் அல்லது நடுங்கவைக்கும் பயமுறுத்தலாக இருக்கலாம்—இனி அதை மறைக்கவோ, மூடவோ முடியாது.

இல்லையென்றால், நான் இப்படி மாறி இருப்பேனா? எது நடக்கக்கூடாது என்று பிடிவாதத்துடன் எதிர்த்துநின்று, பயமுறுத்தி, பலவந்தமாக என் விருப்பத்தை நிறைவேற்றிக் கொண்டேனோ, அதை—அந்த கலியாணத்தை — இப்பொழுது நடத்த முன்கை எடுத்திருப்பேனா ?

ஆனால் ?

அப்பொழுதிருந்த நிலைக்கும் இப்பொழுதுள்ள நிலைக்கும் உள்ள வித்தியாசம் மலைக்கும் மடுவிற்கும் இருப்பதைவிட பன்மடங்கு அதிகமாச்சே ! மூன்றுண்டுகளுக்கு முன்னால், சந்திரனும் மைதிலியும் ஊரறிய திருமணப்பந்தலில் சந்தித்து, எதிரெதிரே நின்று, மணமாலை மாற்றிக்கொள்ள விரும்பினர், துடித்தனர். ஆனால், அது நடக்கக்கூடாதென்று நான் துணிந்து சொன்னேன்; ஊரார் ஆச்சரியப்பட்டனர். தடைகட்டி நின்றேன்; தூற்றினர். கடைசியில் வெற்றிபெற்றேன்; சபித்தனர். ஏன், என் மனைவிகூட, அதற்குப்பிறகு, பழைய அன்புடன்—மனம் நிறைந்த பாசத்துடன்—பழகவில்லை. ஆனால், இன்று, என் உள்ளத்தில் கூத்தாடிக்

கொண்டிருக்கும் திருமணத் திட்டத்தின் ஒருசிறு பகுதியாவது வெளியே தெரிந்தால்போதும், அப்பப்பா, எவ்வளவு கஷ்டங்களை நான் சமாளிக்கவேண்டியிருக்கும். தூற்றல், பயமுறுத்தல், விரோதம், எதிர்ப்பு, பகிஷ்காரம்...ஆம், என்னை மனிதனுக மதிக்கமாட்டார்கள்; கீழான ஜன்மமென்று எண்ணி, என்னிடமிருந்து பிரிந்துபோவார்கள்.

இதற்கெல்லாம் யார் காரணம்? நான், நான், நான்தான். நான்தான், இனி வரப்போகும் துன்பத்திற்கெல்லாம் மூன்ருண்டுகளுக்குமுன் வித்திட்டவன், காவல்காத்து பயிராக்கியவன், கடைசியில் அறுத்து அனுபவிக்கவேண்டியவன்.

நான் மாத்திரம்தானு? இல்லை, என்னைவிட, பெருகிப் பரவி எரியும் அந்த அவமானத்தீயால் அதிகமாகச் சுடப்படப்போகிறவர்கள் அவர்கள்தான். மைதிலியும் சந்திரனும்தான் சகல எதிர்ப்புகளின் பெருஞ் சுமையைத் தாங்கவேண்டிவரும். ஊராரின் இழிமொழி என் காதைத்தான் சுடும். ஆனல், அது, அவர்களுடைய இளம் நெஞ்சுகளை, மலரினும் மெல்லிய மிருதுவான இதயங்களை சுட்டுப் பொசுக்கி, கரியாக்கி, கடைசியில் வெண்ணிறச் சாம்பலும் ஆக்கிவிடும்.

உண்மை. அதைச் செய்யஅது சிறிதும் தயங்காது. முன்வைத்த காலை பின்வாங்காது. வாழவேண்டியவர்கள் என்று நினைத்து துளியளவும் இரக்கம் காட்டாது. கல், பாறை, இரும்பு ஆகியவைகளால் கலந்து செய்யப்பட்ட இதயத்தைக் கொண்டதுதான் சமூகம்.

அப்படியானல்? மைதிலியும் சந்திரனும் அந்த எதிர்ப்பிலிருந்து, ஏளனத்திலிருந்து, அவமானத்திலிருந்து தப்பவேண்டுமென்ருல்.........

முடியாது, முடியாது, முடியவே முடியாது. எதுவந்தாலும் சரி, அவர்கள் இருவரும்-என் கண்கள் இரண்டும்-கணவனும் மனைவியும் ஆகத்தான் வேண்டும். ஆக்கத்தான் போகிறேன். அது நிச்சயம், உறுதி, நடக்கப் போவதும் அதுதான்.

டாண்......மீண்டுமோர் மணியோசை. என்ன, அதற்குள் அரைமணி நேரம் ஓடிவிட்டதா?

அந்த சிறுநேர ஒலியைத் தொடர்ந்து என்மனமும் ஓடியது. நான் இருந்த அறையை, வசிக்கும் வீட்டை, குடியிருந்த தெருவை, பிறந்த ஊரை-எல்லாவற்றையும் கடந்து, அது ஓடியது, நிற்காமல், களைப்படையாமல், வேகமாக ஓடியது.

சந்திரன் இப்போது எங்கே இருப்பான்? பாதி தூரத்தையாவது, விழுப்புரத்தையாவது வண்டி தாண்டி இருக்குமா?

அவன் மனம் இப்பொழுது எப்படி இருக்கும்? மகிழ்ச்சியென்னும் தேன் நிறைந்த புதிய மலராக அது மாறியிருக்கும். இருக்காதா அப்படி? இல்லையென்ருல், என் கடிதம் கிடைத்தவுடன் - மூன்ருண்டு

காலமாக ஒரு சிறு செய்தியையும் எழுதாத அவன் கை, என் மனைவி மரணப் படுக்கையிலிருக்கும் விஷயத்தை தெரிவித்த போதும் இளகாத அவன் பாறை உள்ளம், மைதிலி விதவையாகி விட்டாள் என்ற பேரிடியைக் கேட்ட சமயத்திலும் ஊருக்கு வராத என்தம்பி-இப்பொழுது, உடனே 'லீவ்'வாங்கிக்கொண்டு " இன்றிரவு புறப்படுகிறேன். முடிந்தால் ஸ்டேஷனில் சந்திக்கவும் " என்று தந்தி கொடுத்திருப்பானு ?

என்னுல் மனத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. என்னுள் பொங்கிப் பெருகிக்கொண்டிருக்கும் இன்பவெள்ளத்தை, நான் மட்டும் தனியாக அனுபவிக்காது, மற்றெரு ஜீவனுடன் பங்கிட்டுக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் தீவிரமாக எழுந்தது. "மைதிலி" என்று குரல் கொடுத்தேன். பதில் இல்லை. மறுபடியும் அழைத்தேன். மறுமொழி இல்லை. குரலை உயர்த்தி, பலமாகக் கத்திக் கூப்பிட்டேன். அதற்கும் பதில் கிடையாது. ஒருவேளை, இது வரையில் நெஞ்சைப் பிழிந்து கொண்டிருந்த கவலை தீர்ந்ததே என்று எண்ணி நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருப்பாளோ ? தூக்கமா, எப்படி வரும்? எனக்கே தூக்கம் வரமாட்டேன் என்கிறது, சந்தோஷத்தால் அப்படியிருக்கும்போது, என்னை விட பல்லாயிரம் மடங்கிற்கும் மேலாக அதை அனுபவித்துக் கொண்டிருக்கும் அவளுக்கு எப்படி உறக்கம் வரும்? ஒரு வேளை, வரப்போகும் சுகம் நிறைந்த எதிர்காலத்தைப் பற்றிய தீஞ் சுவைக் கற்பனையில் ஆழ்ந்து இறங்கி யிருப்பாளோ? இருக்குமிருக்கும், பேரிடிகூட காதில் புகாத அந்த நேரத்தில் என்குரலை எப்படி கேட்டிருப்பாள் ?

நான் சிரித்துக்கொண்டேன். சரி, இப்பொழுது அவளை தொந்திரவு செய்யக்கூடாது. விடியட்டும், சந்திரன் வரட்டும், பிறகு பார்த்துக்கொள்வோம். " ஏனடி பெண்ணே, கடைசியில் நீ ஜெயித்துவிட்டாய். உன் ஆசை நிறைவேறிவிட்டது. நான்தான் தோற்றவன். அதை நினைத்தால் அழுகை வரும்போலிருக்கிறது. மைதிலி, என் கண்ணீரைத் துடைக்க, இருக்கும் இரண்டு கைகளால் முடியாது. இன்னும் இரண்டு சின்னக் கைகள் வேண்டும். அதை சீக்கிரம் தருவாயா ?" பேசிவிட்டு சிரிப்பேன், சிரிப்பேன், விலா நோக, கழுத்து சுளிக்க நான் சிரிப்பேன்.

இப்படி எல்லாம் பேச—அதுவும் தம்பியின் மனைவியிடம் கேட்க—எனக்கு உரிமை இல்லையா, உறவுதான் இல்லையா ? உண்டு, நிறைய உண்டு. அதற்கான காரணத்தை தேடியவுடன், என் சிந்தனை ஒரே எட்டில் இருபது ஆண்டுகளைத் தாண்டிக் குதித்தது. அப்பொழுதுதான் எனக்கு கலியாணம் நடந்தது. ஒளியும் கரு நிழலும் ஒன்ருகக் கூடியிருப்பதுபோல், என் திரு

மண சமயத்தில், களிப்பும் கவலையும் இணைபிரியாது சேர்ந்திருந்தன. கலியாண வீட்டில், மகளுக்கு கலியாணப் பூப்பந்தல் ஒரு பக்கம், மற்றொரு பக்கத்தில் அவளைப் பெற்ற தாய், (என் மனைவியின் அன்னை) அகாலப் பிரசவத்தால், இன்றோ நாளையோவென்று இழுத்துக் கொண்டிருந்தாள். திருமணம் முடிந்து, மனைவியுடன் மாத்திரம் நான் வீட்டிற்குள் புகவில்லை. தாயை இழந்த இரண்டுமாதப் பெண் குழந்தையும் எங்களுடன் வந்தாள். அவள்தான் மைதிலி. என் தம்பி சந்திரனுடன் அவளும் என் தோளில் தூங்கியே வளர்ந்தாள்.

என் சிந்தனை, பழைய நினைவுகள் என்னும் சுரங்கத்தை மேலும் தோண்டியது.

வயது ஏறயேற சந்திரன்-மைதிலி நட்பு வளர்ந்தது, வலிவடைந்தது. ஏதாவது செய்து, அவன் அடிபடும்போது அவள் அழுவாள். அவளை யாராவது திட்டிவிட்டால் போதும், வரிந்து கட்டிக்கொண்டு அவன் சண்டை பிடிக்கப் போய்விடுவான். இப்படி இருவரும் நெருங்கி யிருந்தனர், நேசத்துடன் வளர்ந்தனர்.

காலப்போக்கில், என்றோ இரண்டு இலைகளுடன் மண்ணைத் தொட்டுக் கொண்டிருந்த இளஞ் செடி, பூத்துச் சொரியும் பருவத்தைப் பெற்றது. சந்திரன் மைதிலியைக் கண்டால் பெருமூச்சு விடுவான். மைதிலியும் சந்திரனிடம் 'வாடா போடா' என்று சொல்வதை நிறுத்திக்கொண்டு, மரியாதையுடன் பேசவாரம்பித்தாள்.

இப்படி இருக்கும்போது ஒரு நாள்......நான் வீட்டிற்குத் திரும்ப இரவு மணி ஒன்றாகிவிட்டது. வாசலுக்குப் பக்கத்திலிருந்த சந்திரனின் படிப்பறையிலிருந்து மைதிலியின் பேச்சுக் குரல் வந்தது. நான் உள்ளே செல்ல விரும்பினேன். ஆனால், அறை வாசலின் பக்கத்தில் நின்று அங்கு நடக்கும் பேச்சை நான் வரும்வரையில் கேட்டுக் கொண்டிருந்த என்மனைவி, ஆள்காட்டி விரலை உதட்டின் மீது வைத்து 'உஸ்' என்று ஊதி, பேசாமல், நடப்பதைக் கவனித்துக் கேட்கும்படி எச்சரித்தாள். இருவரும் கதவின் மறைவில் நின்றுகொண்டு கவனித்துக் கேட்டோம்.

அவன் கத்தினான். "முடியாது தட்டை எடுத்துக் கொண்டு போய்விடு இல்லாவிட்டால் வீசி எறிந்து விடுவேன்." அவள் கேட்டாள். "ஏன் ?" "இனி உன் கையால் போட்டதை நான் சாப்பிடப் போவதில்லை." அதைக் கேட்டு மைதிலி அழும் குரல் வந்தது. (நானும் என் மனைவியும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டோம்.) மறுபடியும் சந்திரனின் குரல் கேட்டது. "அழுது ஏமாற்ற எண்ணாதே. இனி நான் உன்னை நம்பப் போவதில்லை. பெண்களே இப்படித்தான், நம்பிக்கை ஊட்டி பின் மோசம் செய்பவர்கள்" சீறும் குரலில் அவன் தன் ஆத்

திரத்தை வீசி எறிந்தாள். "உம் ...பிறகு?". "பிறகா, நீ சுந்தரத்துடன் அப்படிச் சிரித்துப் பேசிக்கொண்டிருந்தாயே, அதை நினைத்தால், இப்பொழுதுகூட என்மனம் எரிகிறது. அது ஏனென்று உனக்குத் தெரியுமா? நான் உன்னை...உன்னை..." மைதிலி சிரித்தாள். "இடியட் உனக்கு சிரிப்பா வருகிறது?" பின்னென்ன அழுகையாவரும்? "அழுவாயோ, சிரிப்பாயோ- அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. இனி உனக்கும் எனக்கும் எந்த விதமான உறவும் இல்லை." அவள் கேட்டாள். "உண்மைதானு?".......அதில் தான் என்ன குறும்பு!" ஆமாம் நீ என் அண்ணியின் தங்கை என்பதைத் தவிர நமக்குள் இனி எந்த உறவும் இல்லை" "எங்கே, என் முகத்தைப் பார்த்து, அதை இன்னெரு முறை சொல்லுங்கள்." சிறிது நேரம் அங்கே அமைதி நிலைத்து நின்றது. "உம்...சொல்லுங்களேன்." என்று கேட்டாள் அவள். அவன் தயங்கித் தயங்கி பேசவாரம்பித்தான்." இருந்தால், நீ இப்படி இருப்பாயா?" "எப்படி இருக்கிறேனும்"? "ஒரு வாரத்திற்கு முன் நான் உன்னிடம் ஒரு கடிதம் கொடுத்தேனே, புத்தகத்தில் வைத்து, அதற்கு ஏன் பதில் எழுதவில்லை?" "எழுதாமலிருந்தால் "......" எழுதாமலிருந்தால் என்ன அர்த்தம்? நீ என்னைக் காதலிக்கவில்லை என்றுதானே அதற்கு'அர்த்தம்" அவள் சிரித்தாள். "இடியட், உனக்கு சிரிப்பு வருகிறதா?" அவள் மறுபடியும் பலமாகச் சிரித்தாள். "பதில்தான் எழுதவில்லை. போகட்டும், பழகுவதையும் ஏன் குறைத்துக்கொண்டாய்? என்னைக் கண்டால் ஓடி ஒளிந்து கொள்கிருய். நானுகப் பேசவந்தாலும் ஒதுங்கிப் போகிருய். இதற்கெல்லாம் என்ன அர்த்தம்?" அவள் மெதுவாகப் பேசினுள். "போதும், போதும், இதற்குமேல் கற்பனை செய்து கொள்ளவேண்டாம்." "கற்பனையா?" "பின் வேறென்ன?" "உண்மை". "பொய்" மீண்டும் நிசப்தம். அவன் குரல் சிறிது நேரத்திற்குப் பின் அதை விரட்டியது. "மைதிலி!" அவள் சினுங்கினுள். "இப்பொழுதுதான் என்மனதைப் புரிந்துகொள்ள முடிந்ததா?". "அதை அப்பொழுதே எழுதியிருந்தால் நான் இப்படி சந்தேகித்திருப்பானு?" "என்ருல் எப்படிஎழுதமுடியும்?" "ஏன்முடியாது?". "நல்லகேள்வி நீங்களும் ஒரு பெண்ணுக பிறந்திருந்தால், உங்களுக்கும் ஒரு பெண்ணின் வெட்கம் புரிந்திருக்கும்". "மைதிலி"! "சரிசரி, பிறகு பேசலாம் சாப்பிடுங்கள். உங்களாலே நானும் விரதம். அண்ணு வரும் நேரமாகிறது. அக்காவுக்குத் தெரியாமல், அவள் தூங்கிக்கொண்டிருக்கும் போது, இதை எல்லாம் எடுத்துக்கொண்டுவந்தேன். உம்... சீக்கிரம்". "நீயும் சாப்பிடேன்" "ஒரே தட்டிலா?". "ஏன், எச்சில் என்று நினைக்கிருயா? "கேள்வியைப்பார் கேள்வியை"

நானும் என் மனைவியும் ஒரு வரையொருவர் அர்த்தபுஷ்டியுடன் பார்த்துக்கொண்டோம். பிறகு, ஓசை எழுப்பாமல் சமையலறை நோக்கி நடந்தோம்.

"அண்ணா"—என் சிந்தனைச் சரம் அறுந்தது. எதிரே மைதிலி நின்றுகொண்டிருந்தாள். அவள் கையிலிருந்த விளக்கின் ஒளி என் கண்களை கூசவைத்தது.

"என்னம்மா மைதிலி ?"

"அண்ணா, நாளை சந்திரன்... அவர்......நிச்சயம் வருவாரா ?"

நான் சிரித்தேன். "அதில் என்ன சந்தேகம்? தந்தியை நீயும் பார்த்தாயே, அப்படியிருந்தும் நம்பிக்கை இல்லையா?"

அவள் பெருமூச்சு விட்டாள். "அண்ணா ?"

"சொல்லம்மா ?"

"சொல்லட்டுமா?"

"சொல்லேன், பயமா ?"

"எனக்கு......" அவள் தயங்கினாள்.

"உனக்கு..." நானும் நீட்டி இழுத்தேன்.

"எனக்கு......எனக்கு இஷ்டமில்லை அண்ணா". சொல்லிவிட்டு தன்னிரு கரங்களாலும் முகத்தை மூடிக்கொண்டு அவள் அழவாரம்பித்தாள்.

"மைதிலி, என்னுடைய பிடிவாதத்தால், அன்று, உன் வாழ்வை, நீ கண்ட கனவை, கட்டிய கோட்டையை நான் அநியாயமாய் பாழாக்கினேன். அந்த பாபத்திற்குப் பிராயச்சித்தம் செய்துகொள்ள எனக்கு நீ அனுமதி அளிக்கமாட்டாயா ?" பேசிவிட்டு அவள் முகத்தை— அதில் தோன்றும் உணர்ச்சிப் பாவத்தைப் பார்த்தேன்.

அவள் முகத்தில் புதிய ஒளி பிரகாசித்தது அத்துடன் இருளும் மெதுவாகப் படர்ந்தது. அவள் கண்களில் மகிழ்ச்சி நிறைந்தது. தொடர்ந்து கவலையும் தென்பட்டது. நம்பிக்கை மின்னியது. பயமும் கலந்தது.

"மைதிலி, உன் மனத்திலிருப்பதை மறைக்காமல் சொல். சந்திரனின் சுகம்தான் என் சுகம் என்று அன்று நீ சொன்னாய். அதற்காக, நான் சொல்லிக் கொடுத்தபடி, கொஞ்சமும் பிசகாமல் நடந்தாய். அதை ஞாபகப் படுத்திக்கொண்டு பார்."

அவள் பேசாமல் நின்றாள். பெருமூச்சு விட்டாள்.

ஆம். மூன்றாண்டுகளுக்குமுன் நடந்த சம்பவம் அவள் கண் முன் வந்து நின்றிருக்கவேண்டும்.

அப்பொழுது! சந்திரன்,அவள் முன் வெடித்த எரிமலைபோல் நின்றுகொண்டிருந்தான். நெஞ்சில் குமுறி எழும் துயரத்தை மறைத்துக்கொண்டு, தொண்டையில் திணறிக்கொண்டிருக்கும் அழுகையை அடக்கி வைத்து, விழிகளில் பொங்கும் கண்ணீரை தடுத்து நிறுத்தி அவள் பேசினாள். "முடியாது. எனக்கு இஷ்டமில்லை" அவன் புலிபோல் பாய்ந்தான்." ஏன் இஷ்டமில்லை?" அவள் மெதுவாகச் சொன்னாள்." அதெல்லாம் என் சொந்த விஷயம். நான் சொல்லமாட்டேன். உன்னை நான் கல்யாணம்

செய்துகொள்ள முடியாது." (அறைக்கு வெளியில் நானும் என் மனைவியும் நின்று கொண்டு, உள்ளே நடக்கும் பேச்சை கவனித்துக்கொண்டிருந்தோம். மைதிலியின் அந்தப் பேச்சைக் கேட்டவுடன், பக்கத்தில் நின்றுகொண்டிருந்த என் மனைவி சிறு குரல் எழுப்பி அழவாரம்பித்தாள். சுட்டுவிடுவதுபோல் நான் அவளைப் பார்த்தேன்.) என் தம்பியின் பேச்சுக்குரல்—கிணற்றிலிருந்து வருவது போன்ற கீழான, தெளிவற்ற ஒலி-கேட்டது. "மைதிலி, இந்த பேச்சு உன் இதயத்திலிருந்தா வருகிறது. சொல், அண்ணு சொல்லிக்கொடுத்தபடிதானே நீ பேசுகிருய், இல்லையா?" மைதிலியின் அழுகுரல் ஓசை பீறிட்டெழுந்தது. அதன் நடுவே அவள் குரல் வந்தது. "நீ, பரிமளாவைத்தான் மணந்துகொள்ள வேண்டும்." அதைச் சொல்லும்போது அவள் குரல் எப்படி நடுங்கியது. "அப்பொழுது, பணம் இரண்டாயிரம் கிடைக்கும். அதை வாங்கிக் கடனை அடைத்துவிடுவார் அண்ணு. அதுதானே அவர் திட்டம்." அவன் மேலே சொல்லப்போவதைக் கேட்க நான் ஆவலுடன் எதிர்பார்த்து காத்துக்கொண்டிருந்தேன். என் மனைவியின் தங்கை, எனக்காக, தன் வாழ்வையே எரித்துச் சாம்பலாக்கிக்கொள்ள துணிந்து முன் வந்துவிட்டாள். என்தம்பி—என்னை உருவாக்கிய வயிற்றில் தானும் பத்து மாதம் அடைபட்டுக் கிடந்தவன் - என்னுடைய ரத்தத்துடன் சொந்தக் கலப்பு பெற்றவன் - என்ன சொல்லப் போகிருன்? என் கழுத்தைப் பிடித்து நெறித்துக்கொண்டிருக்கும் கடனை அடைப்பதற்கு, அவன், தன் காதலை உடைத்தெறிவாஞ? "மைதிலி, நான் இதற்கு இணங்கப்போவதில்லை." அவன் பேச்சு காதில் விழுந்ததுதான் தாமதம், ஆத்திரத்துடன் உள்ளே பாய்ந்தேன், என் மனைவி பின்னல் ஓடிவர. "முடியுமா, முடியாதா? நானே கேட்கிறேன், எனக்குப் பதில் சொல்?" அவனும் திருப்பியடித்தான், "முடியாது". "முடியாதா! அயோக்கிய ராஸ்கல், உன்னல் முடியாதா" என்ற பேச்சுடன் அவனை நெருங்கினேன். அவன் பேசாமல், என்னை நிமிர்ந்து பார்த்தான். கோபத்தால் எங்கே நான் சந்திரனை அடித்துவிடுவேனே என்று எதிர்பார்த்த மைதிலி, நான் கையை ஓங்கினல், அந்த அறையைத் தன் கன்னத்தில் வாங்கிக்கொள்ள' அவனுடன் ஒட்டிக்கொண்டு நின்ருள். "கடன், நூறு - இரு நூறு இல்லை. மொத்தமாக இரண்டாயிரம்! அது எதனல் ஏற்பட்டது? என் மனைவிக்கு நகை செய்து போட்டேனு? இல்லை, இதுவரையில் பிறக்காத என் குழந்தையின் பெயரில் நிலம் வாங்கி வைத்திருக்கிறேனு! இப்பொழுது உன் பெயருக்குப் பின் 'பி. ஏ.' என்று இரண்டு எழுத்

துக்கள் ஒட்டிக்கொண்டிருக்கிறதே, அது வருவதற்குத்தானடா, இவ்வளவு பெருந்தொகையைக் கடனாக, கொஞ்சங் கொஞ்சமாக வாங்கினேன். தெரிந்துகொள் அதை." அதற்குமேல் என்னால் பேச முடியவில்லை. அவன் தாழ்ந்த குரலில் "சரி அதை என் தலையில் தூக்கிப் போடு. அதை நான் அடைக்கிறேன்" என்ருன். நான் சிரித்தேன். "ஆமாம், எடுத்தவுடன் உனக்கு மாதச் சம்பளம் பத்தாயிரம் கிடைக்கப் போகிறது. உடனே அடைத்துவிடுவாய், இல்லையா?" என்றேன். அவனும் பேச ஆரம்பித்தான். இருவரிடையேயும் வாக்குவாதம் தடித்தது. அதன் பலன், அன்றிரவே அவன் வீட்டைவிட்டு வெளியேறினன். போவதற்கு முன்னல், அவன் மைதிலியின் மேல் வீசியெறிந்த விஷப்பேச்சு ......அப்பப்பா, என்னுலேயே தாங்கிக்கொள்ள முடியவில்லை. அடிக்க ஓடினேன். மைதிலிதான் தடுத்தாள். அவன் போய்விட்டான். ஆனல், அவனல் ஏற்பட்ட கடன் போய்விடவில்லை. அது என்னைப் பயமுறுத்தியது. என் ரத்தத்தைக் கொஞ்சங் கொஞ்சமாக உறிஞ்சிக்குடிக்கத் தொடங்கியது. கடன் கொடுத்தவன், வீட்டிற்கு வரும்போதெல்லாம், நான் நரகப் படுகுழியில் சிக்கிவிட்டதாக நினைப்பேன். என் கஷ்டத்தைக் கண்ட மைதிலி, தன்னை மற்ருெரு தியாகத்திற்கும் தயாராக்கிக்கொண்டாள். நோயாளியும், என்னைவிட வயதில் மூத்தவருமான பக்கத்து வீட்டுக்காரருக்கு மூன்ருவது மனைவியானுள். அந்த கல்யாணத்தை தடுத்து நிறுத்த என் மனைவி தன்னுலான சகல முயற்சிகளும் செய்தாள். பயன், மைதிலிக்கும் அவளுக்குமிருந்த உறவு கெட்டு, நாசமாகி, ஒருவரோடொருவர் பேசிக்கொள்ளாத நிலைக்கு முற்றியது. தங்கைக்கு ஏற்பட்ட கதியைக் கண்டு மனம் உடைந்த என் மனைவி, கல்யாணம் முடிந்த பிறகு நோய்க்கு ஆளாகி, படுக்கையில் சாய்ந்தவள் பிறகுஎழுந்திருக்கவில்லை. மஞ்சளும் பூவுமாய் மறைந்தாள். அதைத் தொடர்ந்து, ஒரு முழு ஆண்டு பூர்த்தியாவதற்குள், மைதிலியின் கழுத்திலிருந்த மஞ்சள் கயிறு அறுந்து மண்மீது விழுந்தது.

மைதிலி பெருமூச்சு விட்டாள். நானும் நெடு மூச்சை இழுத்து விட்டேன். "மைதிலி, உன் நெற்றியிலிருந்த குங்குமத்தை அழித்தவன் நான். உன் தலையிலிருந்த பூவை எடுத்து வீசியவன் நான். உன் கையிலிருந்த வளையலை உடைத்த பாவி நான் தான். அதையெல்லாம் நான் இப்பொழுது திருப்பித் தருகிறேன். எடுத்துக்கொள்ளம்மா, எடுத்துக்கொள் அதையெல்லாம்."

மைதிலி என்னைப் பார்த்தாள். "இந்த முடிவிற்கு என்னுல் எப்படி வர முடிந்தது என்று பார்க்கிருயா? நீ, வீட்டிற்கு